பக்கங்கள்: 14

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 10 வெள்ளிக்கிழமை 26.08.2022 கதிர் 293

### இது ரகசியம் அல்ல!


யாழ்ப்பாணம் மேயராக இருந்தவர் ஆர்னோல்ட். அந்தப் பதவி காரணமாக இராஜதந்திர பாஸ்போர்ட் பெற்றிருப்பார் போலும். அதை வைத்துக்கொண்டு அப்போது அவர் மூன்று தடவைகள் வெளிநாட்டுக்கு விசிட் அடித்தமை அப்போது எதிரணியால் ☞2

## நெருக்கடியிலிருந்து மீண்டெழ நல்லூரானைப் பிரார்த்திப்போம்

### வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி ரணில்



இலங்கையில் சித்தர்கள் வாழ்ந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பூமியில் எழுந்தருளியிருக்கும் நல்லூர் கந்தசுவாமி கோயிலின் வருடாந்த மகோற்சவப் பெருவிழா நடந்துவரும் இத்தருணத்தில், ☞2



வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ். நல்லூர் கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழாவின் தேர் உற்சவம் நேற்று நடைபெற்றது. லட்சக்கணக்கான பக்தர்கள் புடைசூழ 'அலங்காரக் கந்தன்' என்று வர்ணிக்கப்படும் நல்லூர் கந்தன் தேரில் வந்து அருள்பாலித்தான்.

## செப். 3 ஆம் திகதி வருகிறார் கோட்டா

### உதயங்க தகவல்



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ செப்டெம்பர் 3 ஆம் திகதி நாடு திரும்புவார் என்று ரஷ்யாவுக்கான ☞2

# சைபர் போர் குறித்து படையினர் விழிப்பாகவே இருக்க வேண்டும்

### ஜனாதிபதி வலியுறுத்து



**தரை, வான், கடல் மாத்திரமன்றி எதிர்காலத்தில் சைபர் தளத்திலும் யுத்தம் நிகழலாம். எனவே, எமது படையினர் அவ்வாறான தொழில்நுட்ப யுத்தத்துக்குத் தேவையான அறிவைப் பெற்றிருக்க வேண்டும்.**

**- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.** ☞11

## கொரோனாவால் மேலும் 6 பேர் பலி

இலங்கையில் மேலும் 6 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

இந்த மரணங்கள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என்று அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நாட்டில் பதிவான மொத்தக் கொரோனா இறப்புகளின் எண்ணிக்கை 16 ஆயிரத்து 674 ஆகும்.

## நேற்றும் 114 பேருக்கு கொரோனாத் தொற்று

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான மேலும் 114 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 6 இலட்சத்து 69 ஆயிரத்து 581 ஆக அதிகரித்துள்ளது.

# ராஜபக்ஷ குடும்பத்தின் சாபக்கேடான ஆட்சிக்கு இனியும் இடமளியாதீர்கள்!

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வேண்டுகோள்

ராஜபக்ஷ கள்வர் குடும்பத்தினர் வேண்டுமென்றே இனவாதத்தையும் மதவாதத்தையும் உருவாக்கி நாட்டை ஏழ்மைக்கு ஆளாக்கிக் கொள்கை ஒன்றும் இல்லாதவாறு செயற்பட்டது. அவர்கள் இப்போதும் நாட்டின் அடுத்த ஆட்சியைத் தங்கள் மகன்கள் மற்றும் பேரப்பிள்ளைகளுக்கு வழங்கி நாட்டை அறுதியாக்கி ராஜபக்ஷ ஆட்சியில் கீழ் கொண்டுவரும் நோக்குடன் செயற்படுகின்றனர். இந்தச் சாபக்கேடான ஆட்சிக்கு இனியும் எவரும் இடமளிக்கக்கூடாது.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

களுத்துறை, வாத்துவ பொதுப்பிட்டிய பிரதேச மீனவ மக்களை ☞2



## குடும்பஸ்தர் படுகொலை!

குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் கண்டி - கலஹா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொலணி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மூன்று பிள்ளைகளின் தந்தையே வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். ☞2

## 6 இஸ்லாமிய அமைப்புக்கள் மீதான தடையை நீக்க அவதானம்


தடைசெய்யப்பட்ட 6 இஸ்லாமிய அமைப்புக்களின் தலைவர்களுக்கும், பாதுகாப்பு உயர் அதிகாரிகளுக்கும் இடையில் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் பேச்சுகள் இடம்பெறவுள்ளன என்று அநுராதபுரம் மாவட்டத்தின் நாடாளுமன்ற ☞11

## சேனாதி குருகேவுக்கு செப். 2 வரை மறியல்!

### இரு இராணுவத்தினரைக் கடத்தி தாக்கினார் என்று குற்றச்சாட்டு

கொழும்பு - காலிமுகத்திடல் போராட்டக் களத்தின் செயற்பாட்டாளரான சேனாதி குருகே எதிர்வரும் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை அன்றைய தினம் அடையாள அணிவகுப்புக்காக நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு கொழும்பு கோட்டை நீதிவான் ☞2



## மன்னிப்புக் கடிதத்தை கையளித்தார் ரஞ்சன்

### ஓரிரு நாள்களில் விடுதலையாகும் சாத்தியம்

நீதிமன்றத்தை அவமதித்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு தண்டனை அனுபவித்து வரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க, நீதித்துறையை இழிவுபடுத்தும் வகையில் கருத்துத் தெரிவித்தமைக்கு மன்னிப்புக் கோரி நேற்று ☞2



காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கடுமையாக விமர்சிக்கப்பட்டது. 'அவரை தெரிவு செய்தது யாழ்ப்பாண மேயராக. கனடா மேயராக அல்ல. அங்கே போய் நிற்கின்றார்' - என்று அப்போது வெட்டிப் பிளந்தார்கள். அந்த வாதம் - அவர்கள் குறை கூறியமை - சரி போலத்தான் அப்போது தோன்றியது.

எனினும், 2018 ஏப்ரல் முதல் 2020 டிசெம்பர் வரை 32 மாதங்கள்தான் ஆர்னோல்ட் மேயராக இருந்தார். அப்போது மூன்று தடவைகள்தான் அவர் வெளிநாடு போய் வந்தார்.

ஆனால் இப்போதைய மேயர் மணிவண்ணன் பதவிக்கு வந்து 20 மாதங்கள்தான். இப்போது - இன்று அல்லது நாளை - நான்காவது வெளிநாட்டு ட்ரிப் புறப்படுகின்றார் அவர். இம்முறை கனடாவுக்கு.

ஆர்னோல்ட் பயணித்தபோது ஆரவாரம் பண்ணியோர் இப்போது அம்சடக்காக இருக்கின்றனர்.

அது என்னவோ தெரியவில்லை 'நமக்கு வந்தால் இரத்தம், மற்றவனுக்கு வந்தால் தக்காளி சட்னி' என்ற கதை மாதிரித்தான் விவகாரம் உள்ளது.

* * *

புலம்பெயர் அமைப்புகள் மீதான தடை நீக்கம் இப்போது அரசியலாக்கப்பட்டு இருக்கின்றது. ஆனால் அது குறித்து புதிய குண்டு ஒன்றை நேற்று கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் தூக்கிப் போட்டு இருக்கின்றார் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்.

அப்படிப் புலம்பெயர் மக்களையும் அமைப்புகளையும் தடை செய்தமையும் சட்டவிரோதம், அதனால் தடை நீக்கமும் சட்டவிரோதம் என்கிறார் அவர்.

ஐக்கிய நாடுகள் சபை வகுத்துள்ள நெறிமுறைகள் பின்பற்றப்படாமல் அமைப்புக்களினதும் தனிநபர்களினதும் பெயர்கள் பயங்கரவாதத் தடைப் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் மீது தடை உத்தரவு பிறப்பிப்பதற்கு முன்னர் அந்த நபர்களுக்கும் அமைப்புக்களும் அறிவிக்கப்பட வேண்டும் என்பதோடு தடை செய்யப்படுவதற்கான காரணங்களும் தெரிவிக்கப்பட வேண்டும்.

"எனினும் அவ்வாறான சட்ட ரீதியான செயல்முறை எதுவும் இலங்கை அரசாங்கத்தினரால் பின்பற்றப்படவில்லை. புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் மீது வர்த்தமானியின் மூலம் விதிக்கப்பட்ட தடை மற்றும் தடை அகற்றப்பட்டமையை நாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம். ஏனெனில், அவை அனைத்தும் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோதமான செயல்பாடுகள்." - என அவர் குறிப்பிட்டார்.

இதற்கும் அவர் உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்குப் போட வேண்டியிருக்குமோ என்னவோ...!

**- மின்னல் -**

## சேனாதி குருகேவுக்கு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
திலின கமகே நேற்று உத்தரவிட்டுள்ளார்.

காலிமுகத்திடல் பேராட்டத்தின் முன்னணிச் செயற்பாட்டாளர்களில் ஒருவரான போராட்டத் தேசிய அமைப்பின் இணை ஏற்பாட்டாளர் சேனாதி குருகே மத்திய குற்றவியல் விசாரணை அலுவலகத்தினரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார்.

இரண்டு இராணுவத்தினரைக் கடத்திச் சென்று தாக்குதல் மேற்கொண்டதாகவே சேனாதி குருகே மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

## ராஜபக்ஷ குடும்பத்தின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நேற்று சந்தித்து அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ராஜபக்ஷ குடும்பத்தின் சாபக்கேடான ஆட்சியில் கோடீஸ்வரர்களுக்கு பெரும் வரிச்சலுகைகளை வழங்கி விவசாயிகளின் விவசாய உரிமைகளை இழக்கச் செய்து, உழைக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை அழித்ததனால் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பரிதாபகரமான தலைவிதியை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி, வீரம், மனிதாபிமானம் என்ற பொய்யான வார்த்தைகளால் மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெற்று, தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி நாட்டையே அழித்தார். இதன் பின்னர் இரண்டரை வருடங்களின் பின்னர் இலங்கையின் 22 மில்லியன் மக்கள் நாட்டுக்கு மனிதநேயம் கொண்ட மக்கள் பிரச்சினைகளை புரிந்துகொண்ட ஆட்சியொன்று தேவை எனக் கூறினாலும் தற்போதைய ஆட்சியாளர்கள் அவ்வாறான மக்கள் விருப்பத்தை வழங்கவில்லை.

போலியான வீரத்தை விட மனிதாபிமானத்தை தேர்ந்தெடுக்கும் காலம் வந்துள்ளது. தங்கி வாழும் மனநிலையை விட்டு வெளியேறி அனைவருக்கும் சிறந்ததான ஆட்சியொன்றைத் தெரிவு செய்ய வேண்டும். அதற்கு நானும் நான் சார்ந்தவர்களும் தயாராக இருக்கின்றோம் - என்றார்.

## செப். 3 ஆம் திகதி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க நேற்று ஊடகங்களிடம் தெரிவித்தார்.

இலங்கை வரும் கோட்டாபய ராஜபக்ஷவை மீண்டும் அரசியலுக்குள் கொண்டுவர சிலர் முயற்சிக்கின்றனர். தேசியப்பட்டியல் ஊடாக எம்.பியாக்கி, பிரதமர் கதிரையை வழங்கவும் முயற்சி எடுக்கப்படுகின்றது. இதனை மக்கள் ஏற்கப்போவதில்லை என்றும் உதயங்க வீரதுங்க மேலும் குறிப்பிட்டார்.

## நெருக்கடியிலிருந்து ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாடு எதிர்கொண்டுள்ள இந்த நெருக்கடியான சூழலை வெற்றிகொண்டு, அனைவருக்கும் நலம் நல்க நல்லூர் கந்தனைப் பிரார்த்திப்போம்.

- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

யாழ். நல்லூர் கந்தசுவாமி கோயில் தேர்த் திருவிழாவையொட்டி அவர் நேற்று வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பல வரலாற்றுச் சிறப்புகளையும் மகிமைகளையும் கொண்ட நல்லூர் கந்தசுவாமி கோயில் திருவிழா தற்போது வெகுவிமர்சையாக நடந்து வருகின்றது. இன்று (நேற்று) வியாழக்கிழமை கந்தப் பெருமான் தேரில் வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்கின்றார்.

நல்லூர் கந்தசுவாமி கோயில் திருவிழா விசேடமானது. இலங்கையின் அனைத்துப் பிரதேசங்களில் இருந்தும் இன, மத பேதங்களைக் கடந்து இலட்சக்கணக்கில் பக்தர்கள் இதன்போது ஒன்றுகூடுகின்றார்கள். வெளிநாடுகளில் இருந்தும் இலட்சக்கணக்கான மக்கள் வருகின்றார்கள்.

இந்துக்களோடு சிங்கள பௌத்த மக்களும் ஏனைய சமயத்தவர்களும் தவறாது வழிபட்டு ஆசிபெறும் நல்லூர் கந்தனின் சிறப்பானது, இலங்கையின் அனைத்து சமூகங்களுக்கும் இடையிலான உறவு வலுப்பெற உதவுகின்றது.

நாட்டின் நெருக்கடிகளை வெற்றிகொள்ள அனைவரும் ஒன்றிணைந்து கடினமாக உழைக்க வேண்டிய தருணம் இது. இந்தத் தருணத்தில் இலங்கை மக்கள் அனுபவித்துவரும் துன்பங்கள் விலகி, சுபீட்சமான வாழ்வு அனைவருக்கும் ஏற்பட வேண்டும். மக்கள் அனைவருக்கும் நலம் நல்க நல்லூர் கந்தனை அனைவரும் ஒன்றுகூடிப் பிரார்த்திப்போம் என்று ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## குடும்பஸ்தர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் கலஹா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மன்னிப்புக் கடிதத்தை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நீதிமன்றத்துக்குச் சத்தியக் கடதாசி ஒன்றைச் சமர்ப்பித்துள்ளார்.

2017ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21ஆம் திகதி அலரிமாளிகைக்கு வெளியே நீதித்துறையை அவமதிக்கும் வகையில் ரஞ்சன் ராமநாயக்க கருத்துத் தெரிவித்திருந்தார். அவரது கருத்து, நாட்டின் நீதித்துறை மீதான நம்பிக்கையைச் சீர்குலைத்து விட்டது எனத் தெரிவித்து, சிங்கள ராவய அமைப்பின் செயலாளர் மாகல்கந்தே சுதத்த தேரர் மற்றும் விமானப்படையின் ஓய்வுபெற்ற அதிகாரி ஆகியோர் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இதனை ஆராய்ந்த உயர் நீதிமன்றம், 2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12 ஆம் திகதியன்று நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்காக ரஞ்சன் ராமநாயக்கவுக்கு நான்கு ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. இதுவரை, ராமநாயக்கவின் தண்டனைக் காலம் ஒரு வருடமும் 7 மாதங்களும் நிறைவடைந்துள்ளது.

அலரிமாளிகைக்கு வெளியில் தாம் கூறிய கருத்து முற்றிலும் பொய்யானது, இழிவானது மட்டுமன்றி ஒட்டுமொத்த நீதித்துறையையும் அவமதிக்கும் வகையிலானது என்பதை ஒப்புக்கொண்டுள்ள அவர், அது தொடர்பில் முழு நீதித்துறையிடமும் மன்னிப்புக் கோருவதாகவும் தனது சத்தியக் கடதாசியில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், 2017 ஆகஸ்ட் 21ஆம் திகதி தாம் வெளியிட்ட கருத்தை, மீளப் பெறப்போவதில்லை எனக் கூறி, உயர் நீதிமன்ற வளாகத்துக்கு வெளியே கூறிய கருத்துக்கும் அவர் மன்னிப்புக் கோரியுள்ளார்.

அத்துடன், தனது வாழ்நாளில், ஒட்டுமொத்த நீதித்துறையை விமர்சிக்கும் வகையில் அல்லது இழிவுபடுத்தும் வகையில் எந்தவொரு கருத்தையும் வெளியிடப் போவதில்லை என்றும் அவர் சத்தியக் கடதாசியில் உறுதியளித்துள்ளார்.

சிறைத் தண்டனை அனுபவித்து வரும் ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க, ஜனாதிபதி பொதுமன்னிப்புக்கான ஆவணங்களில் அண்மையில் கையெழுத்திட்டிருந்தார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு - kalaikkathiradvt@gmail.com - தொலைபேசி இலக்கம் 076 443 8622






# 80 ஆம் ஆண்டு 'அமுத விழா' தொடக்க நிகழ்வும் தவத்திரு தனிநாயகம் அடிகளார் புலைமைப் பகிர்வும்!



கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் எண்பதாம் ஆண்டு – 'அமுத விழா' தொடக்க நிகழ்ச்சியும் தவத்திரு தனிநாயகம் அடிகள் புலைமைப் பகிர்வும் நிகழ்வு எதிர்வரும் புதன் கிழமை பி.ப. 5 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் சட்டத்தரணி நடராஜா் காண்டீபன் தலைமையில் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

'மேலைநாடுகளுக்கு தமிழியல் ஆய்வு சென்றடைந்த வரலாறும் தவத்திரு. தனிநாயகம் அடிகளும்' என்னும் தலைப்பில் சென்னைப் பல்கலைக்கழக, தமிழ் இலக்கியத்துறை மேனாள் தலைவருமான பேராசிரியர் வீ.அரசு சிறப்புரை நிகழ்த்தவுள்ளார். நன்றி உரையை கொழும்புத் தமிழ்ச் சங்க பொதுச்செயலாளர் ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி நிகழ்த்தவுள்ளார்.






காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தனித்து விடப்பட்டவர்களின் கூட்டு

'எதிரிக்கு எதிரி நண்பன்' என்பது வழமையான தத்துவம்தான். அது அரசியலுக்கு ரொம்பவும் பொருந்தும்.

பொதுஜன பெரமுனவில் இருந்து வெளியேறி, நட்டாற்றில் நிற்கும் டலஸ் அழகப்பெருமா, பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் போன்ற தரப்பினருக்கும் சஜித் பிரேமதாஸா தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையில் நிரந்தரக் கூட்டு உருவாவது பற்றிய செய்தியை இந்தக் கணக்கில்தான் – எதிரிக்கு எதிரி நண்பன் என்ற கூட்டில்தான் – பார்க்க வேண்டி இருக்கின்றது.

இந்தக் கூட்டைப் பற்றித் தகவல் வெளியிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, "டலஸ் அணியினர் தனித்து விடப்படவில்லை. அவர்களுடன் எமக்கு நல்ல புரிந்துணர்வு இருக்கின்றது. விரைவில் அவர்கள் எதிர் அணியில் எங்களுடன் அமர்வார்கள். அனைவரும் இணைந்து பாரிய கூட்டமைப்பை உருவாக்குவோம். அந்தக் கூட்டணியின் தலைவராக சஜித் பிரேமதாஸ செயற்படுவார்" என்று கூறியிருக்கின்றார்.

ரஞ்சித் மத்தும பண்டார தாம் இப்போது கூறும் உத்தேச கூட்டே முழுமையாகத் தனித்து விடப்பட்டவர்களின் கூட்டாகத்தான் அமையப் போகின்றது என்பதை உணராமல் பேசுகின்றார் போலும்.

ஏதோ டலஸ் அணி மட்டும்தான் தனித்து விடப்பட்டிருக்கின்றது, தங்களது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மிக வலுவாக – தெளிவான – கட்டமைப்பாக இருக்கின்றது என்பது போலவும், தாங்கள் டலஸ் அணியை அரவணைத்துத் தங்களுடன் சேர்த்துப் பலமாக வைக்கப் போகின்றார்கள் என்ற மாதிரியும்தான் அவரின் கருத்து அமைந்துள்ளது.

ஆனால் கள நிலைமை அதுவல்ல. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 'சர்வ கட்சி அரசு', 'தேசிய அரசு' என்றெல்லாம் பிரபலாபிக்கின்றார். எதிரணிக் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கின்றார். ஆனால் அமைச்சர் பதவி ஏற்கவோ, அரசில் சேரவோ இணக்கம் தெரிவிக்காமல், எதிர்க்கட்சித் தரப்பில் அமர்ந்திருப்பதில் சஜித் பிரேமதாஸ மிக உறுதியாக இருக்கின்றார். ஆனால், கள நிலைவரங்களின்படி அவரது ஐக்கிய மக்கள் சக்தியின் பெரும்பாலான எம்.பிக்களின் விருப்பம் அதுவல்ல என்பதுதான் நிஜம்.

அவர்களில் பலர் சர்வ கட்சி அரசோ, தேசிய அரசோ அமைக்கப்படும் போது சஜித் தரப்பிலிருந்து ரணில் பக்கத்துக்கு அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொண்டு போய் விடுவார்கள் என்பதுதான் பலரினதும் ஊகம்; எதிர்பார்ப்பு; கருத்து எல்லாமே.

சில சமயங்களில் அதற்கு முன்னரே இப்போது முப்பது இராஜாங்க அமைச்சர்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமிக்கும் போது கணிசமான 'பாய்ச்சல்கள்', 'குத்துக் கரணங்கள்' இடம்பெற்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஏற்கனவே ஆறு, ஏழு எம்.பிக்களை இழந்து விட்டு நிற்கும் ஐக்கிய மக்கள் சக்தி, பெரும் பாய்ச்சல்களால் அதிக எம்.பிக்களை இழக்கும் நிலைமை கூட வரலாம். அச்சமயத்தில் சஜித்தும், அவரது கட்சிச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவும் கூடத் தனித்து விடப்படும் சூழ்நிலை வந்தாலும் வரலாம்.

அச்சமயத்தில் 'தனித்து விடப்பட்டவர்களின் இந்த கூட்டு' இன்னும் பொருத்தமாக – மிகவும் கனகச்சிதமாக மாறும் என்பதும் மறுக்க முடியாததுதான்.

# காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டத்தை அரசியலாக்காதீர்கள்!

## செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை



காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் போராட்டத்தை தயவு செய்து அரசியல் ஆக்காதீர்கள் என நாடளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் உறவுகளிடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் அனைவருக்கும் ஒரு வேண்டுகோளை விடுக்கின்றேன்.

இது ஒரு புனிதமான போராட்டம். ஐ.நா. சபையிலே இன்றும் எங்களுடைய கருத்துக்கள் உயிரோடு இருக்கின்றன என்றால் உங்களுடைய போராட்டத்தின் பின்னணிதான் காரணம். தொடர்ச்சியாக இரண்டாயிரம் நாள்களைக் கடந்திருக்கின்றது.

உறவுகளை தேடிக் கொண்டிருக்கின்ற 110 உறவுகள் இறந்திருக்கின்றார்கள். என்னுடைய கோரிக்கை, தயவு செய்து இந்தப் போரட்டத்தை அரசியல் ஆக்காதீர்கள். புனிதமான போராட்டத்தை எல்லோரையும் இணைத்து செயற்படுகின்ற ஒரு வாய்ப்பை உருவாக்குங்கள்.

இந்தப் போரட்டத்தில் உங்களோடு நாங்கள் நிற்போம். ஐ.நா. வரைக்கும் அல்லது அதற்கு மேலே செல்ல வேண்டும் என்றாலும் நாங்கள் செல்லத் தயாராக இருக்கிறோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முயற்சியினால்தான் காணாமல் போன உறவுகளுக்கான காரியாலயம். அது நம்பிக்கையற்று போய்விட்டது. நாங்களும் குறை கூறுகின்றோம்.

வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் உள்ளடக்கப்பட்ட நிலையிலேதான் நம்பிக்கையோடு எங்களுடைய உறவுகள் வந்து துணிச்சலாகப் பதில் கூற முடியும்.

எங்களுடைய போராட்டத்தை எல்லோரும் ஒருமித்து செய்யக்கூடிய பலத்தைப் பெறுவதற்கான வாய்ப்பை உண்டு பண்ணுங்கள். உங்களுக்கு பின்னாலே நாங்கள் நிச்சயமாகத் தொடர்ந்து பயணிப்போம் என்பதைக் கூறிக்கொள்கிறேன். – எனத் தெரிவித்துள்ளார்.

# பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் மாணவர் கைது; வடமாகாண ஊடக அமையம் கண்டனம் தெரிவிப்பு

மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்காகக் குரல் கொடுத்த மாணவர்கள் மீது பயங்கரவாத தடைச்சட்டம் பிரயோகிக்கப்பட்டு கைது செய்யப்பட்டுள்ள சம்பவத்தை வடமாகாண ஊடக அமையம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பில் வடமாகாண ஊடக அமையத்தால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு –

சமூகத்தின் செயற்பாட்டாளர்களுடன் இணைத்து மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு எதிராக குரல் எழுப்பிய மாணவச்சமூகம் மற்றும் சிவில் செயற்பாட்டாளர்கள் மீது அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

இவ்வாறான அரசாங்க அடக்கு முறைகளை உடன் நிறுத்தி நாட்டை பொருளாதார அபிவிருத்தி பாதையில் இட்டுச் செல்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அனைத்துப் பல்கலைக்கழக ஏற்பாட்டாளர் உட்பட மூவர் பயங்கரவாதத்தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காணி மற்றும் விவசாய மறு சீரமைப்பு பிரதாணி உட்பட பலர் மீது அரசாங்க அடக்குமுறை பியோகித்து மக்களின் உரிமைக்குரல்களை நசுக்க பயன்படுத்தப்பட்டுள்ள பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தை உடன் நீக்கி தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள சமூகச் செயற்பாட்டார்களை உடன் விடுவிக்குமாறும் அவசரகால சட்டத்தை நீக்குமாறும் கோருகின்றோம்.

இவ்வாறான மக்கள் போராட்டங்களின் போது பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியத்தை சேர்ந்த பத்துக்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஜனநாயக வழியில் போராடியவர்களுக்கு எதிராக பயங்கரவாதத்தடுப்புச் சட்டம் பயன்படுத்தப்பட்டுள்ளமை இலங்கைக்கு வெளிநாடுகளில் ஜனநாயகத்தை விரும்பும் நாடுகளின் தலைவர்கள் இடையே நல்லெண்ணத்தை ஏற்படுத்தவில்லை.

அரசாங்கத்தின் செயற்பாடுகளின் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் தமது அதிருப்தியையும் வெளிப்படுத்தி வருகின்றனர்.

தற்போதைய பொருளாதாரப் போரில் சிக்கியுள்ள இலங்கைத் திருநாட்டை மீட்டெடுப்பதற்குரிய வழிகளை இனங்கண்டு துரித வளர்ச்சியடைய வேண்டிய நடவடிக்கைகளை கைவிட்டு சமூகச் செயற்பாட்டாளர்களுக்கு எதிராக அடக்கு முறைகளைப் பிரயோகித்து வருகின்றமைநல்லெண்ணஅடிப்படையாகத் தென்படவில்லை.

எனவே கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள மாணவர்களையும் சமூக செயற்பாட்டாளர்களையும் விடுவித்து ஜனநாயக நீரோட்டத்தில் மாணவர்களுடன் இணைந்து நாட்டைக்கட்டியெழுப்ப அரசாங்கம் முன்வந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். – என அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# இலங்கைக்குத் தேவையான டொலர்களை வழங்க புலம்பெயர் தமிழ் அமைப்பு தயாராம்

பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்குத் தேவையான டொலர்களைக் கண்டுபிடிக்க புலம்பெயர் தமிழ் மக்கள் தயாராக இருப்பதாக அண்மையில் தடை நீக்கப்பட்ட குளோபல் தமிழ் மன்றம் தெரிவித்துள்ளது.

நல்லாட்சி அரசாங்கத்தின் போது தயாரிக்கப்பட்ட அரசமைப்பு வரைவு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டுமென அதன் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

குளோபல் தமிழ் மன்றம் உட்பட ஆறு அமைப்புகள் மற்றும் அவர்களுடன் தொடர்புடைய 316 பேர் மீதான தடை சமீபத்தில் நீக்கப்பட்டது.

அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள ஜெனிவா மனித உரிமைகள் மாநாட்டைக் கருத்திற்கொண்டு தடை நீக்கப்பட்டதாக தாம் நம்புவதாக பிரித்தானியாவில் இருந்து குளோபல் தமிழ் மன்றத்தின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் மேலும் தெரிவித்தார்.

சிங்கள ஊடகமான்றுக்கு கருத்து வெளியிட்டவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# முற்றாக இந்தியாவில் தயாரான முதல் விமானம் தாங்கிக் கப்பல்

## இரண்டாம் திகதி கொச்சினில் பிரதமர் மோடியால் 'விக்கிராந்த்' செயற்பட ஆரம்பித்து வைக்கப்படும்




இந்தியாவில் முதன் முதலாக உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட 'விக்கிராந்த்' விமானம் தாங்கி கப்பலை (ஐ.ஏ.சி.) பிரதமர் நரேந்திர மோடி வரும் செப்டம்பர் 2 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக இயக்கி, ஆரம்பித்து வைப்பார் என்று அதிகாரப்பூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

இருபதாயிரம் கோடி ரூபா மதிப்பிலான இந்தப் போர்க்கப்பலைத் தயாரித்த கொச்சின் ஷிப்யார்ட் லிமிடெட்டுக்குள் பிரத்யேகமாக ஏற்பாடு செய்யப்பட்ட இடத்தில், கப்பலை இந்திய கடற்படைக்கு பிரதமர் அதிகாரப்பூர்வமாக அறிமுகம் செய்வார்.

கடந்த மாதம் நான்காவது மற்றும் இறுதி கட்ட கடல் சோதனைகளை வெற்றிகரமாக முடித்த பின்னர் இந்திய கடற்படை ஜூலை 28 அன்று கொச்சின் ஷிப்யார்ட் நிறுவனத்திடமிருந்து விமானம் தாங்கி கப்பலைப் பெற்றுக் கொண்டது.

"இந்த நிகழ்வு தற்போது செப்டெம்பர் 2 ஆம் திகதி கொச்சின் ஷிப்யார்ட்டின் ஜெட்டியில் நடைபெற உள்ளது. இந்தியாவின் முதல் விமானம் தாங்கி கப்பலான ஐ.என்.எஸ். விக்ராந்தின் ஓய்வுபெற்ற ஊழியர்கள், பாதுகாப்பு அதிகாரிகள், கப்பல் துறை அமைச்சகங்கள் மற்றும் மாநில அரசு உட்பட பலர் பங்கேற்க உள்ளனர் என்று பி.ரி.ஐக்கு சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

1500 முதல் 2000 பேர் வரை இந்நிகழ்வில் பங்கு கொள்ள வாய்ப்புள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் (IOR) இந்தியாவின் நிலைப்பாட்டை மேம்படுத்தவும், நீல நீர் கடற்படைக்கான அதன் தேடலை அதிகரிக்கவும் விமானம் தாங்கி கப்பல் உதவும்.



மிக் – 29 கே ரகப் போர் விமானங்கள், கமோவ் – 31 ரக் ஹெலிக்கொப்டர்கள் மற்றும் MH – 60யூ எம்.எச். – 60 ஆர் ரக் பல்பணி ஹெலிக்கொப்டர்கள் இறங்கிச் செயற்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ள் இந்தக் கப்பலுக்கு போர் விமானங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

'விக்ராந்த்' விநியோகத்தின் மூலம், விமானம் தாங்கி கப்பலை உள்நாட்டிலேயே வடிவமைத்து உருவாக்குவதற்கான முக்கிய திறன் கொண்ட நாடுகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டியலில் இந்தியவும் இணைந்துள்ளது.

துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகத்தின் கீழ் உள்ள பொதுத்துறை கப்பல் கட்டும் தளமான CSL ஆல் கட்டப்பட்ட இந்தக் கப்பல் இந்திய கடற்படையின் கடற்படை வடிவமைப்பு இயக்குநரகத்தால் (DND) வடிவமைக்கப்பட்டது .

இந்த விமானம் தாங்கி கப்பல் தனது புகழ்பெற்ற முன்னோடியான இந்தியாவின் முதல் விமானம் தாங்கிக் கப்பலின் பெயரால் இப்போது பெயரிடப்பட்டுள்ளது. அந்த முன்னைய கப்பல் 1971 இந்தியா – பாகிஸ்தான் போரில் முக்கிய பங்கு வகித்தது என்பது குறிப்பிடத்தக்கது.



இது சுமார் 1,700 பேர் கொண்ட சிப்பந்திகள் குழுவினருக்கு என ஒழுங்குபடுத்தப்பட்டு வடிவமைக்கப்பட்ட 2,300 க்கும் மேற்பட்ட பெட்டிகளைக் கொண்டுள்ளது. இதில் பெண் அதிகாரிகள் தங்குவதற்கு சிறப்பு அறைகளும் உள்ளன.

விக்ராந்தின் அதிகபட்ச வேகம் சுமார் 28 நொட்ஸ். சராசரியாக்ச் 18 நொட்ஸ் வேகத்தில் 7,500 கடல் மைல்கள் தொடர்த பயணத்த்சி தாங்கும் திறன் கொண்டது இது.

இந்த விமானம் தாங்கி கப்பல் 262 மீற்றர் நீளமும், 62 மீற்றர் அகலமும், 59 மீற்றர் உயரமும் கொண்டது. அதன் கட்டுமானம் 2009 இல் தொடங்கியது.

இந்த விமானம் தாங்கிக் கப்பலின் மேல் விமானத் தளம் இரண்டு கால்பந்து மைதானங்களுடன் ஒப்பிடத்தக்க விஸ்தீரணம் கோண்டது. முழுக் கப்பலிலும் உள்ள பாரிய கப்பலின் தாழ்வாரங்கள் வழியாக ஒருவர் நடப்பதன் மூலம், எட்டு கிலோ மீற்றர் தூரத்தைக் கடக்க முடியும்.

இந்த விமானம் தாங்கி கப்பலில் உள்ள எட்டு மிக வலுக் கொண்ட ஜெனரேட்டர்கள் மூலம் முழுக் கொச்சின் நகரையுமே ஒளிரச் செய்ய முடியும்.

போர்க்கப்பலில் அனைத்து வசதிகளுடன் பிரத்தியேக மருத்துவமனை வளாகமும் உள்ளது.

(மூலம்:என்.டி.ரி.வி.)

# கடற்படையில் இணைகின்ற 'அக்னி' வீராங்கனைகளுக்கு ஒடிசாவில் பயிற்சிக்கு ஒழுங்கு






இராணுவ வேலை வாய்ப்புத் திட்டமான, 'அக்னிபத்' வாயிலாக கடற்படைக்குத் தேர்வாகும் அக்னி வீராங்கனைகளுக்கு பயிற்சி அளிக்க, ஒடிசாவின் ஐ.என்.எஸ்., சில்கா பயிற்சி மையம் முழுவீச்சில் தயாராகி வருகிறது.

இளைய தலைமுறையினருக்கு இராணுவத்தில் வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தரும் அக்னிபத் திட்டத்தை, மத்திய அரசு சமீபத்தில் அறிவித்தது. ஆண் – பெண் இருபாலருக்கும் இதில் அனுமதி உண்டு. இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை பணிகளுக்கு அக்னிபத் திட்டத்தின் கீழ் தேர்வாகும் அக்னி வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு ஆறு மாதங்கள் பயிற்சி அளிக்கப்பட்டு, நான்கு ஆண்டுகள் பணி வழங்கப்படும்.

அதன்பின், திறன் அடிப்படையில் 25 சதவீத வீரர்கள் மட்டும் 15 ஆண்டு பணியை தொடர அனுமதிக்கப்படுவர். நடப்பு ஆண்டில் முப்படைகளுக்கும் சேர்த்து 46 ஆயிரம் அக்னி வீரர்கள் பணி நியமனம் செய்யப்பட உள்ளனர். இதில், 40 ஆயிரம் பேர்ஈராணுவத்துக்கும், கடற்படை மற்றும் விமானப்படைக்கு தலா 3,000 பேரும் நியமிக்கப்பட உள்ளனர்.

இதில், கடற்படை பணிக்கு 10 லட்சம் விண்ணப்பங்கள் குவிந்துள்ளன. 82 ஆயிரம் பெண்கள் விண்ணப்பித்து உள்ளனர். கடற்பணிக்கு தேர்வாக உள்ள 3,000 அக்னி வீரர்களில், 600 பேர் பெண்கள். தேர்ச்சி நடைமுறைகள் முடிந்து, இவர்களுக்கான பயிற்சி நவம்பர் 21இல் துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒடிசாவில் உள்ள கடற்படை பயிற்சி மையமான ஐ.என்.எஸ்., சில்காவில் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

இதில் பெண்களும் பங்கேற்க உள்ளதால், பயிற்சி கப்பலில் பெண்களுக்கு வசதியாக பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டு வருகின்றன. இந்த பயிற்சி முடிந்து பணியில் சேரும் வீராங்கனைகளில் சிலர், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட விமானம் தாங்கி விக்ராந்த் போர்க் கப்பலில் பணியமர்த்தப்பட உள்ளனர்.

மேலும், சென்னை, விசாகப்பட்டினம், கொச்சி ஆகிய இடங்களில் உள்ள கடற்படை தளங்களில் இந்த வீராங்கனைகள் படிப்படியாக பணியமர்த்தப்பட்டு, கடற்படையில் பெண்களின் ஆதிக்கத்தை 2024க்குள் உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# நாட்டின் தற்போதைய நிலைக்கு அரசின் சில முடிவுகளே காரணம்!

## பிரஜாசக்தி அமைப்பின் பணிப்பாளர் பாரத் அருள்சாமி கருத்து

ஸ்திரமான பொருளாதாரக் கொள்கை இன்மையால் அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட சில தீர்மானங்கள் இன்று பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளன என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும் பிரஜாசக்தி அமைப்பின் பணிப்பாளருமான பாரத் அருள்சாமி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில் –

1948 முதல் அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட சில முடிவுகள் இன்று தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் பல பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிக மான வாக்குகளைப் பெற்றிருந்தாலும் பதவி விலக்கியமைக்கு காரணம் அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையை மக்கள் இழந்தமை தான்.

மக்கள் அரசாங்கம் மீதும், ஆட்சியாளர்கள் மீதும் கொண்டிருந்த நம்பிக்கையை இழந்து விட்டனர். எனவே மக்கள் எதிர்பார்க்கின்ற நம்பகத்தன்மையை ஒரு கட்டமைப்பின் ஊடாக வென்றெடுப்பது தான் எமது முதன்மையான செயற்பாடாக அமையும்.

இதற்கு மக்கள் முன்வைக்கும் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும். அதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இல்லாமல் செய்து அந்த அதிகாரத்தை நாடாளுமன்றத்துக்கு




வழங்க வேண்டும். – எனக் கூறியுள்ளார்.

# புலம்பெயர் அமைப்புகளின் மீதான தடைநீக்கம் என்பது ஒரு நாடகம்

## மக்கள் முன்னணி அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் கருத்து

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யாது, ஒரு சில புலம்பெயர் அமைப்புகள் மீதான தடையை நீக்க நடவடிக்கையெடுத்துள்ளமை ஐ.நாவில் எதிர் வரும் மாதம் கொண்டுவரவுள்ள பிரேரணையில் தங்களை நியாயப்படுத்துவதற்காக முன்னெடுக்கும் நாடகம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தெரிவித் துள்ளார்.

மட்டு.ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவி யலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டைக் கட்டியெழுப்பப் போகின்றோம் என்று பொய்களைக் கூறி கடன்களை பெறும் இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களின் பொருளாதாரத்தை அழிப்பதற்காக காணிகளை அபகரித்துள்ளது.



வடக்கு கிழக்கில் உள்ள விவசாயிகளும் கடற்றொழிலாளர்களும் மிகவும் மோசமான பொருளாதார நெருக்கடிகளுக்குள் சிக்கியுள்ளனர். – எனவும் இதன் போது தெரிவித்துள்ளார்.

# உள்ளூர் உருளைக்கிழங்கு அறுவடை ஆரம்பம்!



உள்ளூர் உருளைக்கிழங்கு அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வெலிமடை, உவாபரணகம, பொரலந்த, கெப்பெட்டிபொல உள்ளிட்ட பகுதிகளிலேயே இவ்வாறு உருளைக்கிழங்கு அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது கெப்பிட்டிபொல பொருளாதார மத்திய நிலையத்தில் ஒரு கிலோ உள்ளூர் உருளைக்கிழங்கின் மொத்த விலை 340 ரூபாவாக காணப்படுகின்றது.

# வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் ஒருவர் கிளிநொச்சியில் கைது

560 வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி 155 ஆம் கட்டை பகுதியில் இவ்வாறு ஒருவர் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பா கோட்டே, கொங்கல்ல, பல்லேகல பகுதியை சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டு கிளிநொச்சி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

# மின்சார மோட்டார் சைக்கிள்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதிகள்

## விசேட வர்த்தமானி வெளியீடு

மின்சார மோட்டார் சைக்கிள்கள் மற்றும் சைக்கிள்களை உரிமத்தின் கீழ் இறக்குமதி செய்வதற்கு அனுமதியளிக்கும் வர்த்தமானி அறிவித்தலை நிதி அமைச்சர் வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நிதியமைச்சர் என்ற வகையில் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த அனுமதியை வழங்கியுள்ளார். இதன்படி, மின்சார மோட்டார் சைக்கிள்களை இறக்குமதி செய்வதற்காக சைக்கிள் ஒன்றுக்கு 4000 ரூபாவும் 1000 ரூபாவும் உரிமக் கட்டணமாக அறவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நிர்மாணத் தொழிலுக்குத் தேவையான வாகனங்கள், கிரானைட் உள்ளிட்ட பல கட்டுமானப் பொருளகளை இறக்குமதி செய்வதற்கான சந்தர்ப்பம் நிபந்தனைகளுடன் வழங்கப்பட்டுள்ளது.

அத்தகைய இறக்குமதிகள் அங்கீகரிக்கப்பட்ட காண்டோமினியம் திட்டங்கள், கலப்பு அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் முதலீட்டு வாரியத்தின் கீழ் வராத அரசாங்க திட்டங்களுக்கு செய்யப்படலாம்.

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர், நிதியமைச்சின் செயலாளர் மற்றும் அமைச்சர் ஆகியோரின் அனுமதியுடன் தொடர்புடைய இறக்குமதிகளை மேற்கொள்வதில், திட்ட அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்கள் மற்றும் மூலப்பொருள்களின் அளவுகள் 180 நாள் கடன் கடிதங்களின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளன.

# உர பாவனை ஆய்வு வெற்றி விவசாய அமைச்சு தகவல்

எதிர்வரும் மகா பருவத்தில் இரசாயன மற்றும் கரிம உரங்களின் கலவையைப் பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, நெல் பயிர்ச்செய்கையில் 70 சதவீதம் இரசாயன உரங்களையும் 30 சதவீதம் கரிம உரங்களையும் பயன்படுத்துவதற்கு பத்தலகொட அரிசி ஆராய்ச்சி நிலையம் மற்றும் அபிவிருத்தி நிறுவனம் மேற்கொண்ட ஆய்வுகள் வெற்றி பெற்றுள்ளன என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த மகா பருவத்தில், கரிம உரங்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்ற கொள்கையால் அறுவடை குறைந்துள்ளது. இதனால் உரிய இலாபம் கிடைக்காமையால், உள்ளூர் உணவு உற்பத்தியில் பாரிய தாக்கம் ஏற்பட்டதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில், கடந்த ஆண்டு மகா பருவகால நெல் அறுவடை 40 சதவீதமாகக் குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து பத்தலகொட அரிசி ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் இரசாயன மற்றும் கரிம உரங்களை ஒன்றிணைத்து நெல் பயிர்ச்செய்கையில் பயன்படுத்தும் நோக்கில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன என விவசாய பணிப்பாளர் நாயகம் அஜந்த டி சில்வா தெரிவித்துள்ளார். இந்த ஆய்வில், 70 சதவீதம் இரசாயன உரங்களையும் 30 சதவீதம் கரிம உரங்களையும் ஒன்றிணைத்து மேற்கொள்ளப்பட்ட கலவையின் முடிவு வெற்றியளித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேராசிரியர்கள் மற்றும் துறைசார் நிபுணர்களின் பரிந்துரைகளின் அடிப்படையில், 2022 ஆம் ஆண்டு மகா பருவத்தில் நெல் பயிர்ச்செய்கையில் 70 இற்கு 30 என்ற அளவில் இரசாயன மற்றும் கரிம உரங்களை பயன்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.





# இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தினால் யாழில் ஒரு நிமிட விசித்திர கவனவீர்ப்பு!

யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியிலுள்ள இலங்கை வங்கிக் கிளைக்கு முன்பாக மதியம் 1.20 மணிக்கு ஒன்றுகூடிய வங்கி ஊழியர்கள் பதாகைகளை தாங்கியிருந்ததுடன் மதியம்1.21க்கு கலைந்து சென்றனர்.

'இலங்கை வங்கித் தலைவர் மக்கள் பணத்தை முறைகேடாக பயன்படுத்துகின்றார் சட்டம் எங்கே?, 'பொதுமக்கள் பணத்தை பாதுகாக்குக – இலங்கை வங்கித் தலைவரின் மோசடிகரமான கொடுக்கல் வாங்கல்களை வெளிப்படுத்துக', 'இலங்கை வங்கித் தலைவரின் மோசடிகரமான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விசாரணைக்காக தடயவியல் கணக்காய்வொன்றை ஆரம்பிக்குக' போன்ற வாசகங்கள் பதாகைகளை வங்கி ஊழியர்கள் தாங்கியிருந்தனர்.

# உரிமைக்கு தேவை, உயிரா, குரலா?

## அக்கரை அக்கறை அலசல்



என்.சத்தியமூர்த்தி

ஆறு புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புகளின் மீதான தடையை அரசு நீக்கியுள்ள தருணத்தில், அவற்றில் முக்கியமான ஒன்றான உலகத் தமிழர் பேரவை, அரசையே மீணடும் ஐ.நா. மனித உரிமை கவுன்ஸில் விடயத்தில் சாடி இருக்கிறது. அடுத்த மாதம் ஜெனிவாவில் நடைபெற உள்ள கவுன்ஸில் கூட்டத்தில், இலங்கை அரசுக்கு எதிராக கடினமான தீர்மானத்தை முன்னெடுக்க வேண்டும் என்று, சர்வதேச சமூகத்தை, பேரவை கோரி உள்ளது.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு குறித்து புலம்பெயர்ந்தோர் என்ன சாதிக்க முடியும், என்ற கேள்வி ஒரு புறம் இருக்கிறது. என்றாலும், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு அவர்களை அரவணைத்து செல்ல வேண்டும் என்று கருதும் போது, பேரமைப்பின் இவ்வாறான முன்னெடுப்பு, உள்நாட்டில், பேச்சுவார்த்தை ஊடான தீர்விற்குக் குந்தகம் விளைவிக்கவே செய்யும்.

இது குறித்த ரணில் தலைமையின்



நம்பகதன்மை குறித்து கேள்வி எழுப்ப அவசியம் இல்லை. கடந்த 2015 - 19 காலகட்டத்தில், நல்லாட்சி (?) அரசில் அவர் பிரதமராக இருந்த போதும், இத்தகைய முன்னெடுப்பை எடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அப்போதும் அதனால் எந்த பயனும் ஏற்பட்டு விடவில்லை என்பது வேறு விடயம்.

இனப்போர் முடிந்த காலகட்டத்தில், அரசுடனான பேச்சுவார்த்தை தொடர்ந்து கொண்டிருந்த போதே, ஐ.நா. மனித உரிமை கவுன்ஸிலில் அமெரிக்கா ஒரு தீர்மானத்தை முன்னெடுப்பதற்கு தாங்களே காரணம் என்று தமிழ் தேசிய கூட்டமைப்பு மார்தட்டிக் கொண்டது. பலரும் நினைப்பது போல் இல்லாமல், அப்போது தான், ஆட்சியில் இருந்த மஹிந்த ராஜபக்ஷ அரசு பேச்சுவார்த்தைகளில் இருந்து பின் வாங்கியது. இன்றும் அதனைப் போன்ற ஒரு நிலைமையைத் தான் உலகத் தமிழர் பேரவை முன்னெடுக்கிறதோ என்ற கவலை தோன்றுகிறது.

### மூன்று வகைகள்

இனப்பிரச்சினை தீர்வு குறித்த விடயத்தில், அரசு தரப்பும் சரி, தமிழர் தரப்பும் சரி, இரண்டையுமே மூன்றாக பிரிக்கலாம். ஒன்று, எப்பாடு பட்டாவது பேச்சுவார்த்தை மூலம் ஒரு தீர்வை எட்டி சேர்வது. இதற்கு எதிராக, எப்பாடு பட்டாவது, அத்தகைய பேச்சுவார்த்தை வெற்றி பெற்றுவிடக் கூடாது, என்பது இரண்டாவது ரகம். வைத்தால் குடுமி, சிரைத்தால் மொட்டை என்று சித்தம் போக்கு, சிவம் போக்கு இருப்பவர்கள் மூன்றாவது ரகம்.

இன்று அரசு இருக்கும் நிலையில், அதிலும் குறிப்பாக நாட்டின் பொருளாதார நிலை இருக்கும் நிலையில், இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்னெடுப்பது





குறித்து தென்னிலங்கை மக்களிடையே சிறிது சலசலப்பு தோன்றலாம். அவர்களுக்கு அவர்களது வாழ்வும் வாழ்வாதரமும் மட்டுமே முக்கியம். வடக்கு மற்றும் கிழக்கு வாழ் தமிழர்களுக்கு, வாழ்வோ, சாவோ, அவர்களது உரிமைகளே மிக முக்கியம். அதற்காக உயிரையும் கொடுப்பார்கள், கொடுத்துள்ளார்கள்.

ஆனால், புலம்பெயர்ந்தோர் நிலைமையும் நிலைபாடும் இதிலிருந்து சிறிது மாறுபடுகிறது. அவர்கள் தமிழர் உரிமைகளுக்காக உயிர் கொடுத்தவர்கள் அல்லர். மாறாக, அதற்காக குரல் கொடுப்பதோடு நிறுத்திக் கொண்டவர்கள். அவர்களுடைய உடலிலும் தமிழ்ரத்தம் ஓடுகிறது. உண்மைதான். ஆனால், அவர்கள் வாழும் நாட்டில், சட்டம் அந்த உரிமை குரலை ஒடுக்குமேயானால், அவர்களுடைய குரல் ஒடுங்கி விடும். அதற்கு அவர்கள் எத்தனையோ காரணங்கள் கூறலாம்.

இன்றைய சூழ்நிலையில், உள்நாட்டில் உள்ள தமிழரும் உரிமைகளுக்காக குரல் கொடுப்பதோடு நிறுத்திக் கொள்வார்கள். உயிர் கொடுத்தும், எடுத்தும் உரிமைகள் கிடைத்து விடப்போவதில்லை என்ற உண்மையை காலம் கடந்தாவது அவர்களும் உணர்ந்துள்ளார்கள். ஆனால் அந்த குரல்களிலும் தனித்துவம் என்ற பெயரில் பிரிவுகளும் சுயநலமும் மட்டுமே எஞ்சி உள்ளது.

இதில் அடிப்படை கவலையே, உள்நாட்டில் உள்ள தமிழர் கட்சிகளை போன்றே, புலம்பெயர்ந்தோரும் பிரிந்தே நிற்கிறார்கள் என்ற உண்மைதான். ஏன், இங்கிலாந்து, நோர்வே, கானடா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் வாழும் புலம்பெயர்ந்தோர் இடையேயே பல்வேறு பிரிவுகள் உள்ளன. அதற்கு, அவர்கள் வாழும் நாடுகள் மற்றும் சூழ்நிலைகள் காரணம் அல்ல.

ஒரு காலத்தில் இதற்கான அடிப்படை காரணம், அவர்கள் தாய் நாட்டில் விட்டு சென்ற எச்ச - சொச்சம் பிரிவுகளும் உள் பிரிவுகளும்தான். அதில் ஊர் இருந்தது, தீவுகள் இருந்தன. வடக்கு - கிழக்கு என்று பிரிந்து நிற்றல் நடந்தது. ஏன், வடக்கு மாகாணத்தை எடுத்துக் கொண்டாலே, அதில் யாழ்பாணம், வன்னி, மன்னார், முல்லைதீவு, கிளிநொச்சி என்று இங்கே பிரிந்து வாழ்ந்தார்கள். அங்கே பிரிந்தே நின்றார்கள். தமிழ் அவர்களை இணைத்தது. தமிழ் மட்டுமே அவர்களை இணைக்கிறது.

இந்தப் பிரிவுகளுக்கும் பிரிவினைகளுக்கும். எழுபதுகளில் துவங்கப்பட்ட போராளி குழுக்களும் விலக்கல்ல. உண்மையைச் சொல்லப்போனால், போராளி குழுக்களில் கூட ஜாதிப் பிரிவுகள் தலைவிரித்தாடின. அதனை, அவாகளது உறவினர்களும் நண்பர்களும், அவர்களது ஆதரவாளர்களும் அவர்களை பின் தொடர்ந்தோரும் தங்களுடனேயே வெளிநாடுகளுக்கு எடுத்து சென்று, ஆங்காங்கே ஸ்தாபிதம் செய்தார்கள்.

### பிரிவினைகள், பிரச்சினைகள்

அந்த விதத்தில், ஐம்பதுகளில், எழுபதுக ளில், எண்பதுகளில் என்று தனித் தனியாக வெளிநாடுகளில் தஞ்சம் அடைந்த தமிழர்களிடையே ஒற்றுமையை விட வேற்றுமையே அதிகமாக இருந்தது. அங்கிருந்து இங்கே அரசியல் செய்யும் அந்த பிரகஸ்பதிகள், தங்களுக்குள்ளேயே அரசியல் செய்வதையும் நிறுத்திக் கொள்ள வில்லை.

இது தவிர, கொள்கை ரீதியாகப் பிரிவினைகள். கருத்தியல் ரீதியான பிரச்சினைகள். ரயில் தண்டவாளம் தனித்தனியே பயணித்தாலும், இரண்டுமே ஒரே இலக்கிற்கு தான் போகின்றன என்ற உண்மையை ஏற்றுக் கொள்ள முடியாதவர்கள். அவர்களைப் பொறுத்த வரையில், தங்களது கொள்கையும் கோட்பாடுமே சிறந்தவை. மற்றவை எவையுமே ஏற்புடையவை அல்ல.

புலம்பெயர்ந்தோருக்கு இடையே தோன்றிய இத்தகைய பிரிவுகளுக்கு எல்லாம் அடிப்படையே, தனிமனித பாகுபாடு, வேறுபாடு மற்றும் சுய கௌரவம் போன்றவைதான். எவ்வாறு, உள்நாட்டில், சிங்கள - பௌத்தர்கள் தமிழ் மக்களின் சுய கௌரவத்தை மதிப்பதில்லை என்ற பேச்சு எழுந்ததோ, அவ்வாறே அத்தகைய பிரச்சினைகள், தமிழர்களுக்குள்ளேயே வேரூன்றி உள்ளது. அதுவே, வேராக, விருட்சமாக வளர்ந்து, புலம்பெயர்ந்தோரையும் விட்டு வைக்கவில்லை.

### சர்வதேசத் திருகுவலி

இந்தப் பின்னணியில், உள் நாட்டைப் போலவே, வெளிநாடுகளிலும், தமிழர்களின் உள்வீட்டுப் பிரிவினைகளை இல்லாமலாக்கி, அவர்களை 'ஒரு குடை ஆட்சியின் கீழ்' கொண்டு வந்ததில், விடுதலை புலிகள் இயக்கம் பெருமளவில் வெற்றி



பெற்றது எனலாம். என்றாலும், முழு வெற்றி பெறவில்லை. உள்நாட்டில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகளுக்கு இடையே தொடரும் உள்குத்துக்கள் இதற்கு தக்க சான்று. இவற்றையே, சமகால புலம் பெயர்ந்தோர் அரசியலும் பிரதிபலிக்கிறது.

இதற்குக் காரணமும் விடுதலை புலிகள் இயக்கமும் அதன் செயல்முறைகளும்தான். தர்க்க ரீதியாக, கருத்தியல் ரீதியாக ஆதரித்த அல்லது ஏற்றுக் கொண்ட உள்நாடு மற்றும் வெளிநாட்டு வாழ் தமிழர்கள் கூட, விடுதலை புலிகளின் துப்பாக்கிகளுக்குப் பயந்தே, அவற்றைக் கேள்வி ஏதும் கேட்காமலே அப்போது செயல்படுத்தினார்கள். தற்போது, விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைமையும் அவர்களின் துப்பாக்கி கலாச்சாரமும் காணாமலாக்கப்பட்ட தருணத்தில், மறைக்கப்பட்ட மற்றும் மறுக்கடிக்கப்பட்ட பிரிவுகள் மீண்டும் தோன்றுவது தவிர்க்க முடியாத விடயமே.

என்றாலும், 'நாடு கடந்த அரசாங்கம்' என்ற அமைப்பை விடுதலை புலிகள் இயக்கத்தின் ஆதரவு புலம்பெயர்ந்தோர் தோற்றுவித்தது என்பது, இனப்போர் தோல்வியில் முடிந்ததால் மட்டும் அல்ல. அதுவும் பிறிதொரு புலம்பெயர்ந்தோர் அமைப்பே. என்ன, அவர்கள், கட்டுமஸ்தான நிறுவன அமைப்பை ஏற்படுத்தி உள்ளார்கள். தங்களிடம் உள்ள மனித வளம், அறிவு வளம் மற்றும் பொருளாதார வளங்களைப் பயன்படுத்தி, உலகளாவிய ஓர் அமைப்பை ஏற்படுத்தி, அதனை செயல்படுத்தி வருகிறார்கள்.

அவர்களோடு ஒப்பிட்டு நோக்குகையில் உலகத்தமிழர் பேரவை போன்றவை எல்லாம் பெயருக்குத்தான் அமைப்பு. என்றாலும், இவர்களில் யாருமே உள்நாட்டுத் தமிழர்களுக்காக எதனையுமே உருப்படியாகச் சாதித்துக் கொடுத்துவிடவில்லை. என்ன, இலங்கை அரசையும் அப்போதைய ராஜபக்ஷ தலைமைக்கும் வேண்டுமானால், சர்வதேசம் கொடுத்த திருகுவலிக்கு, அவர்களில் எவரேனுமோ அல்லது அனைவருமோ உரிமை கோரிக் கொள்ளலாம். ஆனால், அந்த உரிமை கூட உண்மையில் சீனாவையும் அதன் அரச தலைமையையும்தான் சாரும்.

### திண்ணை எப்போ காலியாகும்?

இனப்போர் முடிந்த சில மாதங்களிலேயே, நாடுகடந்த அரசு அமைக்கப்பட்டது. அது, ஏதோ எதேச்சையாகவோ, உத்தேசமாகவோ நடந்தேறிய நிகழ்வு அல்ல. மாறாக, விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழர் விடயங்களை முழுக் கட்டுப்பாட்டில் வைத்திருந்த காலகட்டத்திலேயே கருவாக உருவெடுத்த ஒரு விடயம். இனப்போர் முடிந்தாலே அதற்கான காலம் கணியும் என்பதில் அந்தக் கருத்தை உருவாக்கியவர்கள் உணர்ந்தே இருந்தார்கள்.

இந்தப் பெயர் மற்றும் முகம் அறியாத புலம்பெயர்ந்த அறிவுஜீவிகள், விடுதலைப் புலிகள் இயக்கம் தனது துப்பாக்கி கலாச்சாரம் மற்றும் தீவிரவாத கொள்கையை விட்டுவிடும் வரை, தமிழ் இனத்திற்கு விடிவுகாலம் இல்லை என்பதில் மிக தெளிவாக இருந்தனர். அமெரிக்காவில் 2001 இரட்டைக் கோபுரத் தாக்குதல்களுக்கு பின், தீவிரவாதம் குறித்த சர்வதேசத்தின் கடும் போக்கை அவர்கள் உணர்ந்திருந்தார்கள்.

ஆனால், உள் நாட்டில். ஒற்றைக் குதிரைச் சவாரி மட்டுமே செய்து வந்த விடுதலைப் புலிகள் இயக்த்தின் தலைமைத்துவத்தால் அதனைப் புரிந்து கொள்ள முடியவில்லை. அதன் காரணமாகவே, உண்மை நிலைமையை எடுத்துரைத்த அன்ரன் பாலசிங்கம் போன்றோரையும் அவாகளால் முன்பு போல ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இன்றைய தமிழர் நிலைமைக்கு, அன்றைய விடுதலை புலிகள் இயக்க தலைமையின் புரிதலின்மையும் ஒரு முக்கிய காரணம்.

புலம்பெயர்ந்தோரில் ஒரு சாராராவது, விடுதலைப் புலிகள் தங்களது வழிமுறைகளை மாற்றிக் கொள்ளாவிட்டால், அல்லது அந்த இயக்கம் இல்லாது ஆக்கப்பட்டால் ஒழிய, தமிழ் மக்களுக்கு சர்வதேச ஆதரவு கிடைக்காது என்பதை நன்றாகவே புரிந்து வைத்திருந்தார்கள். ஆனால், அவர்களுக்கும் புரியாத விடயம், தங்களை சர்வதேசமும் பகடைக் காயாக மட்டுமே பயன்படுத்தும் என்பது.

அவர்களில் பலரும் இனப்போரில் சர்வதேசத்தின் உதவியோடு விடுதலைப் புலிகள் இயக்கம் அழிக்கப்படும் என்று திடமாக நம்பினார்கள். இது போன்ற நம்பிக்கை, போர் முடிந்த 2009 துவக்கம் தோன்றியது அல்ல. அதற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்னதாக, கடைசி யுத்தத்தை விடுதலை புலிகள் இயக்கம் துவக்கிய 2006 ஆம் ஆண்டுக்கு முன்னரே அவர்களுக்கு அந்த ஞானோதயம் வந்திருந்தது.

(10ஆம் பக்கம் பார்க்க)

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்

# நல்லூரில் காட்சி தரும் வள்ளி காந்தர் திருவுருவம்



- மயூரகிரி சிவாச்சார்யார் -

நல்லூரில் இப்படி ஒரு மூர்த்தி இருப்பதே பலருக்கு தெரியாது.

ஆனால், ஆச்சர்யம் என்ன என்றால் இந்த மூர்த்தி உலாக் காணாத நாளே கிடையாது. அப்படி ஒவ்வொரு நாளும் நல்லூரில் உள்வீதியில் உலா வருகிறார்.

அப்படியா ? நாங்கள் ஒவ்வொரு நாளும் போகிறோம். பார்க்கவில்லையே... என்று சொல்வீர்களா?

இந்த வள்ளி காந்தர்தான் பள்ளியறைக்கு போய் வருகிற சுவாமி.

அர்த்த சாம பூஜை முடிந்ததும் சிறிய மஞ்சத்தில் எழுந் தருளி பள்ளியறை நோக்கி உலாப் போய் தேவியர்களோடு பள்ளி கொண்டு விட்டு உத் காலத்தில் திருப்பள்ளியெழுச்சி கேட்ட பின், மீண்டும் மஞ்ச உலா கண்டு மூலஸ்தானத்திற்கு வருபவர்.

ஓ... அந்த முருகன் தானா? அவர் என்ன வழமையாக இருக்கிற முருகன் திருவுருவம் போல ஒரு சிறிய வடிவம் தானே!

இப்படி தானே நினைப்பீர்கள். வழமையாக முருகன் நான்கு கரம் கொண்டிருந்தால் மூவிலை வேல், வஜ்ரம், வரதம், அபயத்தோடு காட்சி தருவார். இவர் அப்படி இல்லை.. அப்போ...?

இவர் வலது மேற்கரத்தில் அக்ஷ மாலையும் கீழ்க்கரம் அபயக்கரமாகவும் இடது மேற்கரத்தில் கமண்டலமும் கீழ்க்கரம் ஒய்யாரமாக தொடையில் ஊன்றிய கடிஹஸ்தமாகவும் விளங்கக் காட்சி தருவார்.

வள்ளியம்மையை திருமணம் புரிய முருகப்பெருமான் எடுத்த திருக்கோலம் இதுவாகும்.

வள்ளி மட்டுமல்ல காண்போர் அனைவரும் தன் மேல் காதல் புரியுமளவிற்கு முகத்தில் கல்யாணக் களையோடு கூடிய புன்முறுவல் பூத்தபடி இருக்கிறார் இந்தப் பெருமான்.

இவ்வளவு மட்டுமா?

நல்லூர் கந்தசுவாமி ஆலய மஹோத்ஸவத்தின் பூர்த்தியாக நாளை இடம்பெறும் வள்ளி திருமணத்தில் இவர் வில்லும் அம்பும் ஏந்தி வேடுவக் கோலத்தில் சென்று வள்ளிநாச்சியாரை காதல் புரிந்து கரம்பற்றுகிறார்.

அதன்பின்னரே முத்துக் குமார சுவாமிக்கு திருக்கல்யாணம் இடம் பெறுகிறது.

**அன்புபொருந் தடியவர்கள் வாழி வாழி**
**அழகிய நல்லைச்சனங்கள் வாழி வாழி**
**பொன்புரளு மஞ்ஞைக் குக்குடமும் வாழி**
**புகழ் தெய்வக்குஞ்சரியும் குறமின் வாழி**
**துன்புதவிர் வீரவேல் வாழி வாழி**
**சொல்லுமற்று மாயுதங்கள் வாழி வாழி**
**நன்குதரும் நல்லைநகர்க் கந்தர் வாழி**
**நாதாந்த வேலவர் எந்நாளும் வாழி.!**

வள்ளி கல்யாண சுந்தரர் எப்போதும் எங்கும் இன்பமே பெருக அருளட்டும்!

# நல்லூர்த் திருவூஞ்சல்

நல்லூர்ப் பெருமான் புலவர்கள் பாடும் பெருமான். பல புலவர்கள் போட்டி போட்டு நல்லூரானைப் பாடியிருக்கிறார்கள்.

ஈழத்தில் அதிக பழந்தமிழ் பிரபந்தங்களைக் கொண்ட முருக தலங்களை வரிசைப்படுத்தினால், கதிர்காமம், மாவிட்டபுரம், நல்லூர், கந்தவனம் ஆகியன குறிப்பிடத்தக்கன.

அப்பிரபந்தங்களில் சிறப்புடைய ஒன்றான நல்லூரானின் திருவூஞ்சலை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?

1950 களில் வெளியிடப்பட்ட சிறுநூலொன்றில் இந்த திருவூஞ்சலை பார்த்தேன். இந்த ஊஞ்சல் பாடியவர் ஆறுமுகநாவலரின் ஆசிரியரான இருபாலை சேனாதிராச முதலியார் என்று சொல்லப்படுகிறது.

தினமும் இறைவன் பள்ளியறைக்கு எழுந்தருளியதும் இந்த ஊஞ்சலில் சில பாடல்களை கேட்டு இறைவன் தம் துணைவியருடன் மகிழ்ந்து பள்ளிகொள்வதை பலரும் கேட்டிருப்பீர்கள். பார்த்திருப்பீர்கள்.

அரிய தமிழ்ச்சொற்களையும் ஆழமான பொருள் புலப்படும் வார்த்தைகளையும் கூட இப்பதிகத்தில் அவதானிக்கலாம்.

இசை வல்ல விஸ்வ. பிரசன்ன சிவாச்சார்யரும் சயந்தன மாப்பாண முதலியாரும் இந்த ஊஞ்சல் பாடுகிற போது அற்புதமாக இருக்கும்.

தேருலா நிறைவிலும் திருக்கல்யாண உத்ஸவங்களிலும் பெருமான் முன்றலில் இந்த ஊஞ்சல் முழுமையாகப் பாடப்படப்படுகிறது.

நாமும் இந்த திருவூஞ்சல் பாடல்களைப் பாடி நள்ளாற்று வேலவரை நல்லை நகர் கந்தரை மகிழ்வித்து மகிழ்வுறுவோம்.

- மயூரகிரி சிவாச்சார்யார் -

# பனுவல் வெளியீடும் பரிசளிப்பு நிகழ்வும்

நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டுக் கலைக் கூடல் நடத்தும் பனுவல் வெளியீடும் பரிசளிப்பு நிகழ்வும் நாளை சனிக்கிழமை நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் காலை 9 மணியளவில் இடம் பெறவுள்ளன.. நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டுக் கலைக்கூடலின் இணைத்தலைவர் இ.இளங்கோவன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இந்நிகழ்வில் முனைவர் திருநாவுக்கரசு கமலநாதனின் சிந்தனை – சொல் – செயல் (உணர்வனுபவ மீள் நோக்குப்பதிவு) எனும் நூலும், சைவப் புலவர் சிவஸ்ரீ.பால.இந்திரக் குருக்களின் இராமாயண பாத்திரங்களின் கவிநயம் மற்றும் நல்லூரான் கந்தனுக்கு கவி வணக்கம் (மரபுக்கவிதை) எனும் நூல்களும் வெளியிடப்படவுள்ளன.

மேலும் கலை நிகழ்வுகளும், நல்லூர் சைவத் தமிழ் பண்பாட்டுக் கலைக்கூடலினால் யாழ். வலயப் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப் பெற்ற கட்டுரைப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளன. கந்தனின் அடியார்கள் மற்றும் கலை ஆர்வலர்கள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு ஏற்பாடாளர்கள் அழைத்துள்ளனர்.

# நல்லூர்த் திருவிழா கட்டுரைப் போட்டி முடிவுகள்

நல்லூர் சைவத்தமிழ்ப் பண்பாட்டு கலைக்கூடலினால் யாழ். கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கிடையே யாழ் நல்லூர் கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழாவை முன்னிட்டு நடாத்தப்பெற்ற கட்டுரைப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு:-

**கனிஷ்ட பிரிவு**

1. தரம் 06 - சங்கவி சசிகரன் - யா/இந்து மகளிர் கல்லூரி
2. தரம் 06 - சிறிதரன் அபிநயா - யா/இந்து மகளிர் கல்லூரி
3. தரம் 07 - கமலேஸ்வரன் ரிலக்ஷனா - யா/இந்து மகளிர் கல்லூரி
4. தரம் 07 - சிவநேசன் நஜிகா - யா / இந்து மகளிர் கல்லூரி
5. தரம் 06 - கபிலேந்திரன் பிரீத்தி - யா/இந்து மகளிர் கல்லூரி
6. தரம் 06 - குமணன் அபிஷ்கா - யா/இந்து மகளிர் கல்லூரி
7. தரம் 07 - செல்வநாயகம் சுவஸ்திகா - யா/இந்து மகளிர் கல்லூரி
8. தரம் 07 - செல்வகுமார் யஸ்மினி - யா/இந்து மகளிர் கல்லூரி
9. தரம் 06 - ஜெகன் ஷத்வியா - யா/இந்து மகளிர் கல்லூரி
10. தரம் 08 - அக்ஷயா அமிர்தலிங்கம் - யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
11. தரம் 07 - குனேஸ்வரன் டெனிஸ் - யா/மத்திய கல்லூரி
12. தரம் 07 - சத்தியா தமிழினி - யா/இந்து மகளிர் கல்லூரி
13. தரம் 07 - உதயகுமார் ஆதானா - யா/இந்து மகளிர் கல்லூரி
14. தரம் 07 - விஜயகுமார் ஹஜினிகா - யா/இந்து மகளிர் கல்லூரி

**மத்திய பிரிவு மாணவர்கள்**

1. தரம் 11 - செல்வகுமார் விதுனா - யா/இந்து மகளிர் கல்லூரி
2. தரம் 10 - இராசலிங்கம் டிலக்ஷகா -யா/அச்சுவேலி மத்திய கல்லூரி
3. தரம் 10 - மதிவாணன் மயூரா - யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி
4. தரம் 10 - ஓவியா திரிலிங்கநாதன் - யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை
5. தரம் 10 - கந்தசாமி நிருஷா - யா/நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி
6. தரம் 10 - தர்மலிங்கம் ஜெனனிக்கா - யா/அச்சுவேலி மத்திய கல்லூரி
7. தரம் 11 - விஜயகுமார் பிரமிளா - யா/அச்சுவேலி மத்திய கல்லூரி
9. தரம் 09 - கௌசியா ஞானகுமார் - யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை
10. தரம் 10 - தரணிகா ஜெனார்தன் - யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை
11. தரம் 09 - விஜயகுமார் வைஸ்ணவி - யா/அச்சுவேலி மத்திய கல்லூரி
12. தரம் 10 - குகதர்சன் பிரஸ்ணவி - யா/அச்சுவேலி மத்திய கல்லூரி
13. தரம் 11 - றதீஸ்வரன் றஷாஜினி - யா/அச்சுவேலி மத்திய கல்லூரி
14. தரம் 10 - கம்ஷாயினி ஜீவாகரன் - யா/இந்து மகளிர் கல்லூரி

**மேற்பிரிவு மாணவர்கள்**

1. தரம் 12 - ஹர்ணி ஹரிவண்ணன் - யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை
2. தரம் 13 - சந்திரசேகரம் மயூரியா - யா/இந்து மகளிர் கல்லூரி
3. தரம் 12 - சண்முகநாதன் பானுமதி - யா/அச்சுவேலி மத்திய கல்லூரி
4. தரம் 12 - சுஜீவன் அபிநயா - யா/ இந்து மகளிர் கல்லூரி
5. தரம் 13 - இளங்கோ லாவண்யா - யா/இந்து மகளிர் கல்லூரி
6. தரம் 12 - வைஷ்ணவி ஸ்ரீதயாளன் - யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை
7. தரம் 12 - விக்னேஸ்வரன் சாயிறூபினி - யா/இந்து மகளிர் கல்லூரி
8. தரம் 12 - கிருத்திகா தேவராசா - யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
9. தரம் 13 - சரணியா ஜெயக்குமார் - யா/வைத்தீஸ்வரா கல்லூரி
10. தரம் 12 - சத்தியசுரேஸ் கஜானா - யா/இந்து மகளிர் கல்லூரி
11. தரம் 12 - சிறிகாந்தன் துஷிந்தா - யா/இந்து மகளிர் கல்லூரி
12. தரம் 13 - ஜெயக்குமார் வினுசா - யா/நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி
13. தரம் 13 - ஜெகதீஸ்வரன் ஜென்சிகா - யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி
14. தரம் 12 - அருள்மாறன் விசாகன் - யா/இந்துக் கல்லூரி

இவர்களுக்கான பரிசில், சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு நல்லூர் கந்தசுவாமி ஆலய பூங்காவனத் திருவிழா ஆகிய 27.08.2022 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெறும். பரிசில்களும் சான்றிதழ்களும் பெறும் மாணவர்கள் சைவ சமய ஆசார உடையுடன் பரிசளிப்பு நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம் என நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்

# நாடு முழுவதும் அரிசி ஆலைகள் தீவிரமாகக் கண்காணிக்கப்படும்!

## மத்திய சுற்றாடல் அதிகாரசபை அறிவிப்பு





நாடு முழுவதிலுமுள்ள அரிசி ஆலைகளை கண்காணிக்கும் நடவடிக்கைகளில் மத்திய சுற்றாடல் அதிகாரசபை ஈடுபட்டுள்ளது.

சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட்டின் பணிப்புரைக்கமைய மத்திய சுற்றாடல் அதிகார சபை இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

அரிசி ஆலைகள், சுற்றாடலில் ஏற்படுத்தும் தாக்கம் பற்றி ஆராய்வது மற்றும் சுற்றாடல் மாசடைவதைத் தடுக்கும்வகையிலான வியூகங்களை வகுப்பது உள்ளிட்ட நோக்கில், இந்தக் கண்காணிப்பு நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன.

சுற்றாடல் அமைச்சு 27,01,2022 இல், வெளியிட்ட வர்த்தமானியில் அரிசி ஆலைகள் அமைய வேண்டிய இடங்கள், அந்த ஆலைகள் கொண்டிருக்க வேண்டிய நிலப்பரப்புக்களை ஏ,பி,சீ என வரையறை செய்துள்ளது.

இந்த வரையறைகளுக்குட்பட்ட ஆலைகளுக்கே சுற்றாடல் அமைச்சு அனுமதி வழங்குகின்றது. இந்த வரையறைகளை மீறி அமைக்கப்பட்டுள்ள அரிசி ஆலைகள் சட்டவிரோதமாகவே கருதப்படும்.

எனவே, இவ்வாறான சட்டவிரோத அரிசி ஆலைகள் மக்கள் வாழும் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளனவா என்ற கள ஆய்விலும் மத்திய சுற்றாடல் அதிகார சபை ஈடுபட்டுள்ளது.

பொதுவாக, அரிசி ஆலைகளால் சூழல் மாசடைவதைத் தடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கே நாடு பூராகவுமுள்ள ஆலைகளில் கண்காணிப்புக்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

வர்த்தமானியின் விதிகளுக்குட்பட்டு அமைக்கப்பட்டுள்ள அரிசி ஆலைகளால் ஏற்படும் கழிவுகளால் சூழல் மாசடைவதை உச்சளவில் குறைப்பதற்கான தொழில்நுட்ப உதவி,ஒத்துழைப்புக்கள் இந்த ஆலைகளுக்கு வழங்கப்படவுள்ளன.

மத்திய சுற்றாடல் அதிகார சபை இதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் வர்த்தமானி விதிமுறைகளை மீறி அமைக்கப்பட்டுள்ள அனைத்து ஆலைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படவுள்ளன.

இவ்வாறான ஆலைகள்,சமூகத்தில் ஏற்படுத்தும் பாதிப்புக்களை இல்லாதொழிக்க உடனடி ஏற்பாடுகளைச் செய்யுமாறு மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு அமைச்சர் நஸீர் அஹமட் பணிப்புரை வழங்கியுள்ளார்.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள இவ்வாறான ஆலைகள் மீது அவசரமாக அதீத கவனம் செலுத்துமாறும் அமைச்சரால் பணிக்கப்பட்டுள்ளது. வாராந்தம் அமைச்சில் நடைபெறும் கலந்துரையாடலிலே இந்தத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

அமைச்சரின் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில், அமைச்சின் செயலாளர் அனில் ஜாசிங்க, ஆலோசகர் கருனாசேன ஹெட்டியாராய்ச்சி, மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஜெயசிங்க உள்ளிட்ட முக்கிஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

## நிதி ஒதுக்கீடு இல்லாமல் அரச ஊழியரை பராமரிப்பதில் சிக்கல்!

குறிப்பிட்ட பணி ஒதுக்கீடு இல்லாமல் அரச ஊழியர்களை பராமரிப்பதில் சிக்கல் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எம்.எம்.பி.கே. மாயாதுன்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

உரிய முறைக்குப் புறம்பாக அரச சேவைக்கான பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதன் ஊடாக அரச சேவையில் மிகை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## கெஹலிய உள்ளிட்ட மூன்று பேருக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை தாக்கல்!

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உள்ளிட்ட மூவருக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் இந்த குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின்போது, இலங்கை ரூபவாகினி கூட்டுத்தாபனத்தின் நிதியைப் பயன்படுத்திக் கொள்வனவு செய்யப்பட்ட 600 குழாய்களால் 9 லட்சத்து 90 ஆயிரம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக கெஹலிய உள்ளிட்டவர்களுக்கு எதிராகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

## உரிமைக்கு தேவை, ....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்றாலும், இனப்போர் முடிந்த பின்னரும், விடுதலை புலிகள் இயக்கத்தின் காலத்திற்கு அப்பாலும் 'தனி நாடு' என்ற தங்கள் தாரக மந்திரத்திற்கு ஆக்ஸிஜன் கொடுத்து, அதனை உயிரோட்டமாக தங்களது சந்ததியினரிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதில் அவர்கள் தெளிவாக இருந்தார்கள். அந்தச் சந்ததியினர், அது குறித்த அனைத்து வித சமர்களிலும் ஈடுபட வேண்டியிருக்கும் என்தும் அவர்களது கணிப்பாக இருந்தது.

### கூத்தாடிக்கு கொண்டாட்டம்

அதே சமயம், விடுதலைப் புலிகள் இயக்கத்தை போல், ஒரு தனி நாடு நிறுவி அதனை ஆட்சி செய்வதன் மூலம் தங்களது கட்டுப்பாட்டிற்கும் தலைமைத்துவத்திக்கும் சர்வதேச அங்கீகாரம் பெற்றுக்கொள்ள முடியும் என்று அவர்கள் தவறான கற்பனையில் ஈடுபடவில்லை. அவர்களுடைய திட்டத்தில், சாதரண (சிங்கள மற்றும் தமிழ்) மக்களை பாதிக்கும் தீவிரவாதத்திற்கு இடமிருக்கவில்லை. மாறாக, எதிர்கால தமிழர்கள் ஆயுதம் ஏந்த வேண்டிய சூழல் உருவாகுமேயானால், அது கொழும்பு அரசிற்கு எதிரான ஆயுதக் கிளர்ச்சி மற்றும் புரட்சியாக மட்டுமே இருக்க முடியும் என்று கருதினார்கள்.

அந்த இயக்கத்தின் சமகால செயல்பாடுகள் அமைதி மற்றும் அரசியல் சார்ந்த பயணமாக இருந்தாலும், அவர்கள் எதிர்காலத்தில், ஆயதப் புரட்சியை கையெடுக்க மாட்டோம் என்று இது வரை உறுதி கூறியுள்ளனர் எனச் செயதிகள் இல்லை. அது நிலையில், உலகத் தமிழர் பேரவை போன்ற அமைப்புகள் தங்களது செயல் வடிவங்களில் மிகவும் தெளிவாகவே உள்ளன.

ஆனால், புலம்பெயர்ந்த அனைத்து தமிழ் அமைப்புகளும் அல்லது பெருவாரி தமிழ் அமைப்புகளும் ஒன்றாக செயல்பட்டால் மட்டுமே, சர்வதேசம் அவர்களை செவிமடுக்கும். அதனை விடுத்து, அவை தனிதனியாகப் பிரிந்து செயல்பட்டால், ஊர் இரண்டு படும் போது, கூத்தாடிக்கு தானே கொண்டாட்டம். உள்நாட்டு தமிழர் அரசியல் நிலைமையே மீண்டும், மீண்டும் புலம்பெயர்ந்தோர் செயல்பாடுகளிலும் பிரதிபலிக்கும்!

## விரைவில் தேசிய மின்கட்டமைப்புடன் இணைகின்றது நுரைச்சோலை அனல்மின் நிலைய மின் பிறப்பாக்கி!

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் திடீரென செயலிழந்த முதலாவது மின் பிறப்பாக்கியை எதிர்வரும் திங்கட்கிழமை முதல் தேசிய மின் கட்டமைப்பில் இணைத்துகொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபையின் ஊடக பேச்சாளர் அண்ட்ரூ நவமணி இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய 300 மெகாவோட் மின்சாரம் தேசிய மின் கட்டமைப்பில் இணைத்துக்கொள்ளப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 15 ஆம் திகதி நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் முதலாவது மின் பிறப்பாக்கி திடீரென செயலிழந்தது.

அத்துடன் இரண்டாவது மின்பிறப்பாக்கியின் தொழிற்பாடுகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதன்காரணமாக நாட்டில் தினமும் 3 மணி நேரம் மின் துண்டிப்பு அமுல்படுத்தப்பட்டு வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## குப்பைமேடு தீக்கிரையாகி புகை வெளியேறுவதால் சிரமத்தில் மக்கள்; சீர்செய்து தருமாறு கோரிக்கை!



மட்டக்களப்பு - திருப்பெருந்துறை பகுதியில் உள்ள குப்பைமேடு தீக்கிரையமாகியதால் ஏற்பட்டும் புகை காரணமாக அப்பகுதியில் உள்ள மக்கள் மற்றும் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றமையல் அதனை சீர்செய்து தருமாறு கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளனர்.

அருகில் உள்ள தொழில் பயிற்சி நிலைய மாணவர்கள் மற்றும் பயிற்சி நிலைய விரிவுரையாளர்கள் இந்த நிலையை சீர்செய்து தருமாறு உரியவர்களிடம் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

திருப்பெருந்துறை திண்மகழிவு முகாமைத்துவ நிலைய வளாகத்தில் கடந்த 13 ஆம் திகதி ஏற்பட்ட தீ பரவல் காரணமாக அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அதனைத் தொடர்ந்து தீயை மட்டக்களப்பு மாநகரசபையின் தீயணைக்கும் பிரிவினர் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்த போதிலும் திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையத்திலிருந்து வெளியேறும் புகை காரணமாக அருகில் உள்ள தொழில் பயிற்சி நிலைய மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் தொடர்ந்து சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குப்பை மேட்டிலிருந்து வெளியேறும் புகை சுவாசத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதன் காரணமாக தம்மால் கற்றல் செயற்பாடுகளை முறையாக முன்னெடுக்க முடியாத நிலை காணப்படுவதாக அருகில் உள்ள தொழில் பயிற்சி நிலைய மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் திண்மக்கழிவு அண்டிய பகுதியில் உள்ள பொதுமக்களும் இதன் காரணமாக பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் எனவும் தெரிவிக்கின்றனர்.

கொடுவாமடுவில் குப்பைகொட்டுவதற்கான இடம் வழங்கப்பட்டுள்ள போதும் இந்த திண்மக் கழிவு நிலையத்தில் குப்பைகள் கொட்டுவதால் இந்தப் பாதிப்புகள் தொடர்ச்சியாக ஏற்படுகின்றன எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

அந்த பகுதியில் ஏற்பட்ட தீ முற்றாகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதுடன் நிலைமை சீரடையும் எனவும் மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வர் தி.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

திண்மக்கழிவுநிலையத்தில் குப்பைகள் கொட்டப்படுவதில்லையெனவும் உக்கும் கழிவுகள் கொண்டுவரப்பட்டு மீள்சுழற்சி செயற்பாடுகள் மட்டுமே முன்னெடுக்கப்படுகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த குப்பைகளைத் தனியார் துறையினருக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் அவ்வாறு வழங்கும்போது இங்கு கழிவுகள் கொண்டுவரும் பிரச்சினைகள் தீர்க்கப்படும் எனவும் மாநகரசபை முதல்வர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir

## சைபர் போர் குறித்து படையினர் ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெற்றிகரமான இராணுவத்தை உருவாக்க ஒழுக்கம், பயிற்சி, அறிவு ஆகியன அவசியம் எனச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் ஏற்கனவே இந்த விடயங்கள் அனைத்தையும் நிறைவேற்றி வருகின்றது எனவும் கூறினார்.

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்துக்கு ஜனாதிபதி வர்ணம் மற்றும் பல்கலைக்கழக வர்ணம் வழங்கும் நிகழ்வில் நேற்றுப் பிற்பகல் கலந்துகொண்டபோதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக் கழகத்துக்கு வருகை தந்த ஜனாதிபதிக்கு இராணுவ மரியாதை செலுத்தப்பட்டதுடன், ஜனாதிபதி வர்ணம் மற்றும் பல்கலைக்கழகக் கொடி வர்ணங்களுக்கு சர்வமத ஆசீர்வாதமும் வழங்கப்பட்டது.

பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, விசேட உரை நிகழ்த்தியதுடன் ஜனாதிபதி வர்ணமும் பல்கலைக்கழக வர்ணமும் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்துக்கு வழங்கி வைத்தார்.

பின்னர், கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் மேஜர் ஜெனரல் மிலிந்த பீரிஸ் விசேட உரை நிகழ்த்தியதுடன் பல்கலைக்கழக கொடி மற்றும் வர்ணங்களையும் வழங்கி வைத்தார்.

சேர் ஜோன் கொத்தலாவல வளாகத்தில் உள்ள நூதனசாலைக்கு விஜயம் செய்த ஜனாதிபதி, விசேட அதிதிகளின் நினைவுப் புத்தகத்தில் குறிப்பொன்றையும் இட்டார்.

ஜனாதிபதிக்கு இங்கு விசேட நினைவுப் பரிசு ஒன்று கையளிக்கப்பட்டது.

அங்கு உரையாற்றிய ஜனாதிபதி மேலும் கூறிதாவது:-

இன்று சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பெரும் புகழைப் பெற்றுள்ளது. ஒரு பாதுகாப்பு பல்கலைக் கழகமாக உங்கள் திறமை வெளிக்காட்டப்பட்டுள்ளது.

பயங்கரவாதம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டகாலத்தில் போராடிய பல அதிகாரிகள் இந்தப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர்கள். எனவே, இந்தப் பல்கலைக்கழகத்தை நாம் பாதுகாக்க வேண்டும். மேலும், திறமையான அதிகாரிகளை நமது இராணுவத்தில் சேர்க்க வேண்டும் என்பதே எனது பிரார்த்தனை.

இந்தப் பல்கலைக்கழகம் மிகவும் முக்கியமானது. ஒரு இராணுவத்தை வழி நடத்த வேண்டுமானால், அது இராணுவம் தலைமையைப் பொறுத்துள்ளது. மேலும், அந்த இராணுவத்துக்கு ஒழுக்கம் தேவை. ஒழுக்கம் இல்லாமல் இராணுவம் முன்னேற முடியாது. ஒரு இராணுவம் ஒழுக்கத்துடன் மட்டுமே முன்னேற முடியும். இராணுவத்தை ஒழுக்கத்தால் மட்டும் வழிநடத்த முடியாது.

ஒழுக்கத்துடன் பயிற்சியும் தேவை. ஒரு இராணுவம் ஒழுக்கமும் பயிற்சியும் பெற்றாலும் வெற்றியடைய முடியாது. அந்த இராணுவத்துக்கு அறிவு இருக்க வேண்டும்.

இராணுவ அறிவு மற்றும் பிரதேச அறிவு இருக்க வேண்டும். அந்த அறிவுடன் வெற்றி கிடைக்கும். இங்குள்ள தலைவர்களுக்கு ஒழுக்கம், பயிற்சி மற்றும் அறிவு கொடுக்கப்படுகின்றது. அங்கிருந்து, இராணுவம் அனைத்துப் பிரிவுகளுக்கும் தலைமைத்துவத்தை வழங்குகின்றது. சிலர் இராணுவத் தளபதிகளாக மாறுகின்றார்கள். மற்றவர்கள் இந்தப் பட்டத்துடன் பல்வேறு துறைகளில் சென்று சேவை செய்கிறார்கள் - என்றார்.

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியும் தேசிய

பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான சாகல ரத்நாயக்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) கமல் குணரத்ன, பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா மற்றும் முப்படைத் தளபதிகள், பொலிஸ்மா அதிபர், பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க மற்றும் பல்கலைக்கழக உபவேந்தர்கள் உள்ளிட்ட அதிதிகள் பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## 6 இஸ்லாமிய .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் இாக் ரஹ்மான் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் பாதுகாப்பு விசேட ஆலோசகர் சாகல ரத்நாயக்க மற்றும் பாதுகாப்பு உயர் அதிகாரிகளுடன் இாக் ரஹ்மான் எம்.பி. மற்றும் எச்.எம்.எம் ஹரிஸ் எம்.பி. ஆகியோர் நேற்றுமுன்தினம் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

இதன்போது 6 இஸ்லாமிய அமைப்புக்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையைத் தளர்த்துவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது என இாக் ரஹ்மான் எம்.பி. குறிப்பிட்டார். ஏலவே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நடைபெற்ற சந்திப்பில் இந்த விடயம் குறித்து வலியுறுத்திய நிலையில், அது தொடர்பாக ஆராயுமாறு ஜனாதிபதி, சாகல ரத்நாயக்கவுக்கு ஆலோசனை வழங்கியிருந்தார்.

இதனடிப்படையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சந்திப்பில் பல முக்கிய விடயங்கள் குறித்து அவதானம் செலுத்தப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையில் குறித்த 6 தடைசெய்யப்பட்ட இஸ்லாமிய அமைப்புக்களின் தலைவர்களுக்கும் பாதுகாப்பு தரப்பின் உயர் அதிகாரிகளுக்கும் இடையில் எதிர் வரும் திங்கட்கிழமை முதல் சந்திப்பு இடம் பெறவுள்ளது எனவும் இஷாக் ரஹ்மான் எம்.பி. மேலும் தெரிவித்தார்.






காலைக்கதிர் Kalaikkathir

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 104**

நீதியரசர் வீரமந்திரி யாழ்ப்பாணத்தில் இடம்பெறுகின்ற சாதி அடக்குமுறைகளையும் சாதிச் சண்டைகளையும் விசனத்துடன் குறிப்பிடுகிறார். இலங்கையில் தான் நீதிபதியாக இருந்த போது நீதி செய்வதற்காக கீழ் சாதித் தமிழர் ஒருவரின் வழக்கை மேல் சாதி எதிர்ப்புகளையும் மீறி (அப்பொழுது புகழ்பெற்ற சட்டத்தரணிகள் சாதி வெறி கொண்டவர்களுக்காக ஆஜராகி இருந்தும்) கொழும்புக்கு மாற்றித் தான் விசாரித்தார் எனவும் கூறுகிறார்.

அவர்கள் இப்படித் தங்களுக்குள்ளேயே மனிதருக்குள் பாரபட்சம் காட்டும் போது எப்படிச் சிங்கள மக்கள் பாரபட்சம் காட்டுகிறார் எனக் கூறலாம் என்று அவர் கேட்டார்.

சிங்கள மக்கள் தமிழ் மக்களை சாதி வாரியாகப் பார்ப்பதில்லை, தமிழர்களது அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளைப் பார்த்தால் சில விடயங்கள் விளங்கும் என மேடைகளில் உதாரணங்கள் சொல்லுவார். இவை வழமை.

அவர்போல்அல்லாது, சண்முகதாசன் மார்க்சியவாதி. தொழிலாளர் வர்க்கத்தினருக்காகவும் பின் தங்கிய மக்களுக்காகவும் உழைத்தவர்.

அவர் தான் மார்க்சியவாதியாகவும், ஒரு தமிழனாகவும், சச்சி பொன்னம்பலத்தின் 'தேசிய பிரச்சினையும் தமிழர் விடுதலைப் போராட்டமும்' (**The National Question and the Tamil Liberation**



சச்சி பொன்னம்பலம்

**Struggle**) என்ற நூலை அவர் எழுதிய மைக்காக இரங்குகிறேன், வருந்துகிறேன், விசனப்படுகிறேன் எனத்தான் கருத்தாக்கம் செய்தார்.

தமிழரது வகுப்புவாதம், சிங்கள வகுப்புவாதத்திற்கு ஆதரவாகப் புறப்படும் பிரச்சாரங்களுக்கு எதிராக ஒரு விசர்ப் பிடித்த நிலையில் இயங்க விரும்புகிறதா? அப்படியானால் இவைதங்கள்நிலைப்பாட்டை விளக்குவதற்காக எழுதப்பட்ட நோக்கங்களுக்கு எதிர் விளைவையே தரும். எல்லா யதார்த்தங்களுக்கும் மேலாக ஒருவர் தனது வாதங்களை மிகைப்படுத்தி மற்றவர்களின் வாதங்களை அபத்தமாக்க முயல்வது வீணான முயற்சி. இதைத்தான் சச்சிபொன்னம்பலம் தனது 273 பக்கங்களில் எழுதி அந்தக் காகிதங்களை வீணடித்திருக்கிறார். சிங்கள மக்கள் ஓர் இனம் அல்லவென்றும், அவர்களது முந்திய வரலாறுகளைப் பழித்து, தமிழர்தான் இலங்கையின் ஆதி குடிகள் என்றும், சிங்களவர்கள் வந்தேறு குடிகள் என்றும் அவர் வாதிடுகிறார். இதில் ஒன்றும் புதிய கருத்தோட்டம் இல்லை. பழையவை தான். எவர் இலங்கைக்கு முதல் வந்தார்கள் என்ற வாதப் பிரதிவாதங்களில் இறங்கத் தான் விரும்பவில்லை என்றும், இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அது




நாகநாதன்

எந்த உதவியையும் தரப் போவதில்லை என்றும் கூறுகிறார். சில வரலாறுகளை, சுதந்திரம் பெறப்பட்டதை குறித்து கருத்தாக்கம் வைத்து, தமிழர்களது தந்திரம் டொனமூர் காலங்களில் இருந்து பிரித்தானியாவின் மேற்பார்வையில் இருப்பதை விரும்பியதே ஒழிய, தங்களைப் போல் காலனித்துவத்தால் பாதிக்கப்பட்ட சிங்கள மக்களை நம்பி இருக்க விரும்பவில்லை, சோல்பரியின் பரிந்துரைகள் கூட சமநிலையான பிரதேசங்களை ஏற்றுக் கொள்ளாத போது, தமிழ் மக்கள் தங்களது தந்திரங்களை விடவில்லை. பண்டாரநாயக்கா திருகோணமலையிலிருந்தும் கட்டுநாயக்காவிலிருந்தும் பிரித்தானியாவின் படைத்தளங்களை வாபஸ் பெற வைத்த போது, தமிழரசு கட்சி தலைவர் வைத்தியர் நாகநாதன் இங்கிலாந்தின் மகாராணிக்குத் தங்களை (தமிழ் மக்களை) பாதுகாப்பின்றி கைவிட வேண்டாம் எனத் தந்தி அனுப்பினார். ஏன் இப்படியான உண்மையற்ற புரளிகளைக் கிளப்ப வேண்டும்? உண்மையில் இலங்



சண்முகதாசன்

கையில் எவருமே அதன் சுதந்திரத்திற்காகப் போராடவில்லை. ஒரு சொட்டு இரத்தமும் சிந்தவில்லை. இந்தியாவிற்கு சுதந்திரம் கொடுக்க வேண்டிய நிலைமை வந்தால் இலங்கைக்கும் அதனைத் தந்து விட்டு வெளியேறினார்கள். தமிழ் மக்கள் வன்முறைகளால் பாதிக்கப்படுகிறார்கள் என்பதும் அப்படியான காரணிகளால் தங்களுக்கு பிரதேச சுய உரிமை வேண்டும் என்ற கோரிக்கைகள் எழுந்ததும் உண்மைதான். இவற்றைத் தமிழ் மக்கள் ஏன் நேரடியாக, தேவையற்ற, மிகைப்படுத்தப்பட்ட காரணங்களைப் புராணங்களில் இருந்தும் கற்பனைகளில் இருந்தும் பிறப்பித்துக் கோரிக்கைகள் வைக்க வேண்டும்? இப்படியான நூலை எழுதியதால் சச்சி பொன்னம்பலம் தமிழ் மக்களுக்கு எந்தச் சேவையும் தரவில்லை. தமிழ் மக்கள் சில சமயம் 'தங்களை தங்




கள் நண்பர்களிடம் இருந்து காப்பாற்றக் கோரி' கேட்கலாம் என சண்முகதாசன் அபிப்பிராயம் கூறினார்.

தமிழ் மக்கள் சிங்கள அரசியல் வாதிகளை, ஆட்சியாளர்களை, நம்பவில்லை. அவர்களோடு கை கலந்து நின்று, வடக்கு, கிழக்குப்பகுதிகளில் அவர்களது கோரிக்கைக்கு ஆதரவு தந்த இடதுசாரி கட்சிகளை நம்பவில்லை. பின்னர் ராஜீவ் காந்தியையோ, எம்.ஜி.ஆரையோ கூட நம்பவில்லை. பிரபாகரனும் யாரையும் நம்பியவர் அல்லர். ஏனெனில் அவர் ஆயுதங்களையே நம்பியவர். அதுதான் தனது இலட்சியத்தை வென்று தரும் என்பதில் ஆழமான விசுவாசம் கொண்டவர். தமிழ் மக்கள் அவரின் இலட்சியத்தை மதித்தார்கள். ஆனால் பாதைகளில் இடர் வந்த சமயம், வழி தவறலாம் என்று எண்ணிய போது கூட, ஆயுதங்களுக்கு அடங்கித் தலையாட்டி விட்டே சென்றார்கள். சிலவற்றில் இணங்கி, சுது மலைப் பேச்சை நடத்தினாலும் பிரபாகரனின் நம்பகத்தன்மை பின்னரும் தடங்களை மாற்றியது.

### வன்முறைக் கட்டமைப்புகள்

பாகுபாடின்றி நடத்தப்பட வேண்டும் என்ற வலியுறுத்தல் உட்பட புத்திஜீவிகளினதும் பன்முகத்தன்மை கொண்டவர்களினதும் வழிநடத்தல்கள், தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் என்பவை யாவுமே தமிழ் மக்களுக்கு எதிரான இனவாதமாகவே பார்க்கப்பட்டன.

இவை அவர்களது பேரினவாதப் போக்கா அல்லது தங்களின் இறைமைகளைப் பாதுகாப்பதற்கான தற்காப்புக்களா என்பது கேள்விதான்.

1956 ஆம் ஆண்டிலிருந்து படிப்படியாக உன்மத்தமான வன்முறைகள் தமிழ் மக்களுக்கு எதிராக அவர்களது அடுத்த கட்டமைப்புகளால் அவிழ்த்து விடப்பட்டன.

இந்தப் புத்திஜீவிகளுக்கும் அவர்களது பின்னணியில் நின்ற அரசியல்வாதிகளுக்கும் கையும் கால்களுமாக சாராயப் போத்தல்களுக்கும், சாப்பாட்டுப் பார்சல்களுக்கும் இயங்கும் பிரகிருதிகள் (இவர்கள் காலி முகத்திடல் போராளிகளையும் பதம் பார்த்தார்கள்) தமிழ் மக்களைத் தாக்கி அவர்களின் உயிர்களைப் பறித்து, உடைமைகளை கொள்ளையிட்டோ, தீயிட்டோ, நிர்மூலப்படுத்திய போது அவர்களிடமிருந்து வந்த பேரினவாதத் திமிர்த்தன வார்த்தைகள் கவனிக்கத் தக்கவை. அவர்கள் அந்த நிர்மூலங்களை நடத்தும் போது 'யாப்பனே பள யாங்' (யாழ்ப்பாணம் போடா), 'தெமிழீழ துவண்ட' (தமிழீழத்துக்கு ஓடு) என்று தமிழர்களுக்கு என்று இருந்த பிரதேசத்தை தமது நடத்தைகளால் உறுதிப்படுத்தினார்கள். தமிழ் மக்களின் பிரசன்னங்களைத் தங்களது பகுதிகளிலிருந்து பலவீனப்படுத்தி அப்புறப்படுத்துவது அவர்களது நோக்கமாக இருந்தது. தமிழ் மக்களும் பெறப்பட்ட கப்பல்களில் இந்தப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்தவர்களாக புறப்பட்டனர். ஆனால் அவர்களில் எத்தனை பேர் தமிழ்ப் பகுதிகளில் வேர் விட்டு அந்தப் பிரதேசங்களைப் பலப்படுத்தினர் என்பது கேள்விக்குறியே.

(வளரும்....)

காலைக்கதிர்
Kalaikkathir

# நல்லூர் கந்தசுவாமி ஆலயப் தேர்திருவிழா உற்சவத்தின் போது அலங்காரக் கந்தன் தேரில் வலம் வரும் காட்சிப் பதிவுகள்













வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத் தேர்த்திருவிழா நேற்று வியாழக்கிழமை காலை நடைபெற்றது.

காலை 6 மணியளவில் ஆரம்பமான விசேட பூஜை வழிபாடுகளை தொடர்ந்து ஆறுமுக பெருமான் வள்ளி தெய்வானை சமேதரராய் காலை 07 மணிக்கு தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருட்காட்சி அளித்தார்.

தொடர்ந்து வள்ளி தெய்வானை சமேதரராய் தேரில் வெளிவீதி உலா வந்த ஆறுமுக பெருமான் காலை 8.15 மணிக்கு தேர் இருப்பிடத்தை வந்தடைந்தது.

நேற்றைய தேர்த்திருவிழாவின் போது நாட்டின் பல பாகங்களில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

அதேவேளை ஆயிரக்கணக்கான அடியவர்கள் அங்க பிரதட்சணம் செய்தும், நூறுக்கணக்கானவர்கள் காவடிகள் எடுத்தும் கற்பூர சட்டிகள் ஏந்தியும் நேர்த்திக் கடன் நிறைவேற்றினர்.

**படங்கள்: ஐ.சிவசாந்தன்**







www.selleys.com
www.nipponpaint.lk

NIPPON PAINT LANKA (PVT) LTD.
No. 69A, Buthgamuwa Road, Rajagiriya, Sri Lanka.
Telephone: +94 11 4 600400. Fax: +94 11 4 600409
www.nipponpaint.lk

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.08.2022இல் வெளியிடப்பெற்றது.